பதின்நான்கு பக்கங்கள் விலை ரூபா நான்கு

நாவலர்
சித்தன்கேணி
90 / 91 A/L
கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
எமது வழமையான ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படுகிறது.

வார முரசொலி

நாவலர்
பண்டத்தரிப்பு
"கசடறக் கல்"
ஆண்டு 11 கணிதம்
புள்ளி விபரவியல்
ஆசிரியர்: திரு. U.குணம்
Sat & Sun 1.00 P.M

முரசு 04 ஒலி 104 ஞாயிற்றுக்கிழமை 20 - 05 - 1990 வைகாசி 06 ஷவ்வால் 24

# பேச்சுக்கள் தோல்வி கண்டால்

# மீண்டும் பூகம்பம் வெடிக்கும்?

"இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளை அடையும் வரை நாம் சுதந்திரமாக வாழவே முடியாது, இன்றைய தற்காலிக சுதந்திரம் நீடிக்குமா? அல்லது மீண்டும் ஒரு முறை பூகம்பம் வெடிக்குமா?"...

மூதூர்ப் பிரதேசம், சம்பூர் என்ற இடத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தில், மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும், கவிஞருமாகிய, திரு. மு. வே, யோ. வாஞ்சிநாதன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது;- இன்றைய கால கட்டத்தில் அரசுடன் எமது கட்சியின் அரசியல் ஆலோசகரான திரு. அன்ரன் பால

—14 ஆம் பக்கம் பார்க்க

### 50 பிக்குகள், 6000 சிங்களவர் மதவாச்சியிலிருந்து

## இன்று வன்னி பாதயாத்திரை விடுதலைப் புலிகள் பாதுகாப்பு

சுமார் 50 பௌத்த பிக்குகள் உட்பட ஆறாயிரம் மக்கள் மதவாச்சியிலிருந்து வடக்கே வவுனியா வரை பாதயாத்திரையாக இன்று ஞாயிற்றுக்கிழமை வருகின்றனர்.

வரலாறு காணாத ஊர்வலமாக இது இடம் பெறுகின்றது, இனங்களுக்கிடையில் சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம்நிலவவேண்டியதின் அவசியத்தினை வலியுறுத்தியே இந்த பாதயாத்திரை சாதி, மத, இன, வர்க்க வேறுபாடின்றி எல்லோரும் மனிதர்கள் என்ற ரீதியில் நாம் கருதுகின்றோம்

இந்த சமாதான பாதயாத்திரையில் பங்குகொள்ள

—14 ஆம் பக்கம் பார்க்க

## மலையகத்தில் பெண்கள் பலர் சாகும்வரை உண்ணாவிரதம்

நுவரெலியாவில் கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணித்தலைவர்சந்திரசேகரனைவிடுதலைசெய்யக்கோரிநுவரெலியாவில்பெண்கள் உட்பட இருபது பேர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்றனர். சுமார் பத்தாயிரம் மலையக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதனால் மலையகப் பகுதியில் 14 தோட்டங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

சந்திரசேகரன் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்படலாம் எனக்கருதி முன்னர் வேலைநிறுத்தத்தில் இறங்கிய மலையக தொழிலாளர்கள் நேற்று முன்தினம் மீண்டும்

—14 ஆம் பக்கம் பார்க்க

## நாளைய ஹர்த்தாலில் மருத்துவம் அவசிய தேவை பாதிப்படையா

நாளை நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலில் குடிநீர், மருத்துவம், நகரசுத்தி அத்தியாவசிய தேவைகள் பாதிப்படையாது இயங்க வேண்டும் என விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பொறுப்பாளர் டொமினிக் கேட்டுள்ளார்.

கடைகள் யாவும் மூடப்பட்டு வாகனங்கள் யாவும் ஓடாது நிறுத்தப்பட்டு பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறும் கேட்டுள்ளார்.

கடந்த கால வடக்கு கிழக்கு போராட்டங்களில் மலையக மக்கள் தமது பூரண ஆதரவை எமக்கு அளித்து வந்தனர். மலையக மக்கள் தமது உரிமையை தாமே போராடி

—14ஆம் பக்கம் பார்க்க

## கைதான ஒரிஸா அகதிகள் சென்னையில் உண்ணாவிரதம்

(சென்னை)

சென்னைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் சிறையில் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

தமது உண்ணாவிரதத்தை பலவந்தமாக உடைக்க நினைத்தால் தாம் தற்கொலை செய்து கொண்டு விடுவதாகவும் இவர்கள் மிரட்டியுள்ளனர்.

உண்ணா விரதமிருக்கும் இந்த இளைஞர்கள் தாம் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரி வருகின்றனர்.

கடந்த மாதம் ஒரிஸாவில் இருந்துதப்பிவந்த இவர்களை தமிழக பொலிஸார் கைது செய்து சிறையில் வைத்தமை தெரிந்ததே.

## முரசொலி 115மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி முடிவு

புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 12 வது விளையாட்டு விழாவின் முரசொலி அனுசரணையுடன் நடத்தப்பட்ட 115மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் பின்வருமாறு.

முதலாம் இடம்: அன்ரனி ஐவன் அவுஸ்கோன் மட்டக்களப்பு இரண்டாம் இடம்: ஏஸ் எம். றபீக் காக்கையன் குளம் வவுனியா மூன்றாம் இடம்:

— 14ஆம்பக்கம் பார்க்க

## ஹர்த்தாலுக்கு ஈரோஸ் ஆதரவு

மலையகத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் பேரை இந்தியாவிற்கு நாடு கடத்த அரசு எடுக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்

—14 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலி சைக்கிள் ஓட்டப் போட்டியில் சிங்கள வீரர்கள்

வவுனியா-புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தினால் முரசொலி அனுசரணையுடன் நேற்று நடாத்தப்பட்ட மாபெரும் சைக்கிளோட்டப் போட்டியில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சில வீரர்களும் பங்கு பற்றினார்கள். நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து ஆரம்பமாகிய 115 மைல் தூர இச் சைக்கிளோட்டம் பரந்தனை வந்தடைந்து பின் அங்கிருந்து மீண்டும் வுவுனியா வழியாக

—14ம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணை என நினைத்து பெற்றோலை ஊற்றினார் பாட்டி

தனது விளக்குக்கு மண்ணெண்ணை என நினைத்து பெற்றோலை ஊற்றி கொழுத்திய வயதான பாட்டியை தீயில் இருந்து காப்பாற்ற முனைந்தவர் கடும் தீக்காயங்களுடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விநாயக புரத்தைச் சேர்ந்த இராசரத்தினம் (35) என்பவரே மேற்படி தீக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ப-8

## பாதயாத்திரை குழுவினருக்கு யு, என் பி. பிரமுகர் வரவேற்பு

ஞாயிற்றுக்கிழமை வவுனியா வந்து மதவாச்சி திரும்பும் சமாதான பாதயாத்திரையில் பங்குபற்றுபவர்களை ஐக்கிய தேசியக்கட்சியின் உயர் பீட பிரமுகர்கள் மதவாச்சி பஸ் நிலையத்தில் வைத்து வரவேற்பார்கள்.

இத்தகவலை மேற்படி சமாதான பாதயாத்திரையின் நிர்வாகக் குழு பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மதவாச்சி நகரத்தில் அமைந்துள்ள போதி அருகே பாதயாத்திரை ஆரம்பமாகும்.

(11)

## குளிர்பானங்கள் இன்று முதல் வன்னியில் கட்டுப்பாட்டு விலை

வவுனியாவில் குளிர்பான வகைகள் ஒரு குறிப்பிட்ட விலைக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் அதற்கான விலையையும் விடுதலைப்புலி

—14ஆம் பக்கம்பார்க்க

# தொழிற் பயிற்சிகள்

★ **Airconditioning & Refrigeration**

நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்நகரில் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலைசெய்வதற்கு ஏற்றவாறு செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Spoken English**

ஒருமாத முழுநேர வகுப்பும் சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்களும் நடைபெறும்.
அச்சடித்த பாடக்குறிப்பு இலவசமாகவழங்கப்படும்

★ **றேடியோ ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**

ரெலிவிசன், வீடியோ, டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்:— 4 மாதம்

★ **றீவைண்டிங்**

ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 4 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:

24.5.90 (கிழமை நாட்கள்)
27.5.90 (சனி, ஞாயிறு)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவையருகாமை)
05142


## முறைசாராக்கல்வி ஆசிரியர்களுக்கு சேவைக்காலவகுப்பு

முறைசாராக் கல்வி போதனா ஆசிரியர்களுக்கான சேவைக்கால கல்வி வகுப்புகள் நடைபெறவுள்ளன. இவ் ஆசிரியர்களுக்கான சேவைக்கால வகுப்புகள் இம்மாதம் 20ம், 21ம், 22ம் திகதிகளில் யாழ்-கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக வெளிக்கள உத்தியோகத்தர் (முறைசாராக் கல்வி) வே.பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.(4)

## நினைவு விழா

'திருவாசகம்' ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நினைவு விழா இன்று காலை தொண்டமனாறுசெல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாசக சுவாமிகள், தொண்டர்சபையினரும், சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகளும் கூட்டாக நடாத்தும்இந் நினைவு விழாவிற்கு இளைப்பாறிய அதிபர் திரு. செ.சிவஞானம் தலைமை வகிப்பார்
(36)

## ரயிலால் விழுந்து வயோதிபர் படுகாயம்

ஓடும் ரயிலிலிருந்து அவசரமாக இறங்க முற்பட்ட ஒருவர கீழே தவறி விழுந்து படுகாயமடைந்தார். சுன்னாகம் ரயில் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடந்த இச்சம்பவத்தில் அச்செழுவைச் சேர்ந்த கனகசபை (65)என்பவர் படுகாயமடைந்தார். (ப.2)

## பட்டப்பகலில் சைக்கிள் திருட்டு

கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நவீன சந்தை மணியம் ஸ்ரோர்ஸ் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கமீல்டன் என்பவருடைய சைக்கிள் திருட்டுப் போயுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கிணற்றில் விழுந்து மரணம்

திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த 80 வயதுடைய மாணிக்கம் என்பவர் கிணற்றில் விழ்ந்து மரணமாகியுள்ளார்

இரவு நேரத்திலே இவர் கிணற்றில் விழுந்துள்ளார். (ப.11)

## யாழ். பல்கலைக்கழக 2ம்,3ம் ஆண்டுவகுப்பு ஜூலை 25ல் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் 2—ம் 3—ம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் மீண்டும் அடுத்த மாதம் 25—ம் திகதி ஆரம்பமாகுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவர்களுக்கான பரீட்சைகள் முடிவடைந்துள்ளன. (03)

## பணிப்பாளர் விஜயம்

(சங்கானை)

யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை கடந்த வாரம் வட்டுக்கோட்டை காரைநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க வைத்திய சாலைகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டுகுறைபாடுகளை கேட்டறிந்தார். (13)


# LONDON EXAMS

## NOV / DEC - 90

| | | ஆரம்பம் |
|---|---|---|
| C. I. M. A - Stage I (London) | | 2-6-90 |
| I. D. P. M - part I (London) | | 2-6-90 |
| A. A. T. - Stage I (Sri Lanka) | | 2-6-90 |
| I. A. B. - (Book Keepers) (London) | Foundation | 2-6-90 |
| | Inter | 9-6-90 |
| | Final | 9-6-90 |

Basic, dBase III +, Lotus 1, 2, 3
Word Processing பயிற்சிகள்
20. 05. 90 முதல் ஆரம்பமாகின்றன

For details

**School of Business Administration**

C. I. M. A யினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

**16, 3rd Cross Street**
(O L R தேவாலய மேற்குப்பக்கம்)
**Jaffna**

05131



## சிறு விளம்பரம்

### தேவை

றபர்சீல், பிளாஸ்ரிக் நேம் போட், விளம்பரபோட், கீறெக் வேலை பழகுவதற்கு ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும். வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். செல்வம் ஆட்ஸ், 51, 52, சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்.
05137



# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## உழவு இயந்திரங்களை

வாடகைக்கு அமர்த்துவதற்கான

## கூறுவிலைகள்

மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கூட்டிச் சேர்த்து வைக்கப்படும் குப்பை கூழங்களை ஏற்றி சபையின் எல்லைப்பகுதியில் கொண்டுபோய் பறிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் பெட்டியுடனான உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. நாளாந்தம் சுமார் 50 மைல்களுக்குட்பட்ட தூரம் குப்பைகளை ஏற்றிப் பறிப்பதற்கு நிர்ணயிக்கப்படும்.

உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள், சாரதி மற்றும் இயந்திரங்களில் ஏற்படக்கூடிய பழுதுகள் யாவற்றிற்கும் கூறுவிலைக்காரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

கூறுவிலைக்குரிய விண்ணப்பங்களை மாநகரசபை அலுவலகத்திலுள்ள சுகாதாரப் பகுதியில் எதிர்வரும் 25. 05. 90 ஆம் திகதி பிற்பகல் 2. 00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்
18. 05. 1990

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
05140


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### ஆறுமுகர் குணநாயகர் B.A(SLAS)

(உதவி அரசாங்க அதிபர், வவுனியா)

மண்ணில் 24. 04. 1944 — விண்ணில் 15. 05. 1985

திதி 20. 05. 1990

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் திருவுருவாய் சேவையின் சிகரமாய் பழகியோர் இதயங்களில் பாச மலராக வீற்றிருக்கும் எங்கள் அன்புக் குணமே! உமது இன் சொல்லும் ஈகை உணர்வும் ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் இதயத்தை விட்டு அகலாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

சரவணை
வேலணை

அன்பு மனைவி, மக்கள்
தகப்பன், தாய், சகோதரங்கள்
மாமன், மாமி, மருமக்கள்
பெறாமக்கள்.
05135




# ஒரே காலத்தில் ஒளி வீசிய இரு மணிகள்

புலவர்மணி, பண்டிதமணி இருவரதும் நூல்களின் வெளியீட்டு விழா இன்று முற்பகல் மட்டக்களப்பு நகரமண்டபத்தில் சிறப்பாக நடைபெற இருக்கிறது. அதனையொட்டி இக்கட்டுரை விசேடமாகப்பிரசுரிக்கப்படுகிறது.

ஈழநாட்டில் இந்த நூற்றாண்டில் தமிழ் படித்தவர்கள் என்ற வகையில் ஆராய்ந்து கொண்டு சென்றால், தமிழ் அறிஞர்கள் பலர் சுன்னாகம் ஸ்ரீமத்.அ. குமாரசாமிப்புலவர் அவர்களிடம் படித்தவர்களாகவோ, அன்றி அவரிடம் தொடர்பு உடையவர்களாகவோ இருப்பார்கள் என்பதையறியலாம்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலையில் தலைமை ஆசிரியர் பதவியை 1.10.1902 இல் ஏற்றுக் கொண்டார்கள் புலவர் அவர்கள். புலவரவர்களுக்கு அப்பொழுது வயது நாற்பத்தெட்டு. இப்பதவி 1921 வரை நீடித்தது. புலவரவர்களுக்குத தொடக்கத்தில் வேதனமாகப் பத்துரூபா மட்டுமே வழங்கப்பட்டது. பிற்காலத்தில் அத்தொகை இருபத்திரண்டு ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அந்தக்கால வேதனநிலை இருந்தவாறு!

புலவரவர்களின் மேதாவிலாசம், கற்றிருந்தவர்கள் என்று இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் யார் யார் இருந்தார்களோ அவர்களெல்லோராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. சுன்னாகம் பூ.முருகேச பண்டிதரின் பாராட்டுப் பின்வருமாறு:

சுன்னை நகர் தனிலுதித் தோன்
எந்நயமும் பெறக் கவிகள்
சொல்ல வல்லோன் சென்னை
முதற் கன்னியிலும்
தனது கல்விப் புகழ் நாட்டுந்
திறத்தான் மிக்கோன்
தன்னவரென் றன்னியரென்
றுன்னாமல் யாவரையுந்
தழுவு மேன்மை மன்னு
மொரு குணக்குன்றம்
குமாரசுவாமிப் பெயரோன்
பாவல் லோனே.

முருகேச பண்டிதர் அவர்களால் புலவரவர்களுக்கு வழங்கப்பெற்ற பெயர் 'குணக்குன்றம்' என்பதாம்.

குணக்குன்றமாகிய புலவரவர்களின் இறுதிக் காலத்தில் நாவலர் காவிய பாடசாலையில் அவர்களிடம் கற்ற மாணவர்கள் பன்னிருவர் புலவரவர்கள் நாவலர் பாடசாலைக்கு வந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்ட போது சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று பாடங் கேட்டனர்.

'புலவருடைய உடல்நிலை வரவரக் குன்றியது. இந் நிலையில் நாவலர் வித்தியாசாலைக்கு முன்போலப் போக முடியவில்லை. முதலில் வாரத்தில் ஒருநாள் மாத்திரம் போய் வந்தனர். பின்னர் அவ்வாறு செய்தலும் இயலாது போயிற்று. வகுப்பு மாணவர் தினமும் புலவர் வீட்டுக்கு வந்து பாடங் கேட்டனர். அப்பொழுது படித்த மாணவர்கள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, க. குருமூர்த்தி சிவாசாரியார், சி. தியாகராசபிள்ளை என்போர் 1921 ஆம் ஆண்டு இறுதியிற் பண்டிதமணியைத் தவிர மற்றவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வகுப்பை விட்டு நீங்கினர்.

நோய் தணியவில்லை. அறிவும் இடையிடையே குறைந்தது. புலவர் நோயுற்ற காலந் தொடக்கம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை புலவரோடு கூட இருந்தார். 9.3.1922ல் அவர் இறைவன் திருவடி நிழலை எய்தினர். புலவருடைய சிறந்த மாணவராகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைகையறுநிலைக் கவலையில் மூழ்கிப் பின்வருஞ் செய்யுளைக் கூறித் தமது குரவருக்கு அஞ்சலி செலுத்தினர். அச் செய்யுள் பின்வருமாறு;

செந்தமிழும் ஆரியமுந்
தேர்ந்து வீறித் தேய
மெலாம் சென்றிலகும்
சீர்த்தி ஒன்றே இந்த நில
மிசையிருப்ப
இணையிலாத எண்ணிப்
பல கவிதழைத் த
இனிய வாயும் அந்தமிலாக்
கவிகள்பல
எழுதி வைத்த அம்புய
நேர் திருக்கரமும்
அந்தோ! அந்தோ இந்தனத்
திற் செந்தழலில்
உருகி வீய யாமிதனைப்
பார்த்திருத்தல்
என்னே! என்னே!

பண்டிதமணி அவர்கள் தமது ஆசிரியரான புலவர்களின் இறுதியின் போது பாடிய இப்பாடல்

'ஆசு கவியால்
அகில உலகெல்லாம்
வீசுபுகழ்க் காள
மேகமே - பூசுரா
விண்கொண்ட செந்தழலாய்
வேகுதே ஐயையோ
மண்டின்றபாணமென்ற
வாய்''

காளமேகத்தின் உடல் எரிந்து கொண்டிருக்கும் போது கதறியழுத இரட்டையர்களின் பாடலை நினைவு கூர வைக்கிறது.

## மஹா மஹோபாத்தியாயரின் கவலை

வித்துவரத்தினமாகிய குமார சுவாமிப் பிள்ளையவர்கள் தேக வியோகமடைந்த செய்தி அறிந்து மெத்த வருத்தம் அடைந்து கொண்டோம். என்ன செய்யலாம் தமிழின் நிலைமை இவ்வாறிருக்கிறது.

புலவரவர்களின் மறைவுதமிழின் வளர்ச்சியை மிகவும் பாதித்துவிட்டது என்பதே தமிழ்த்தாத்தா அவர்களது கருத்தாகும்.

## புலவர் மணியின் கவலை

ஆசிரியப் பிரானா ரானஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவரவர்கள் இயற்கை யெய்திய செய்தியறிந்து பெருங்கவலை கொண்டார் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள்.

''சுன்னைக் குமார
சுவாமிப் புலவர் பிரான்
இன்னிலம் விட்
டேகினா ரென் றுரைத்
தார்—என்னே
இனியா ரிவனைப் போ
லெவ்விதத்திலேனும்
இனிவரமாட் டாரென்
செய்வேம்.

## புலவரவர்களின் ஆசி

உலகப் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களில் முக்கிய இடத்தைப் பெற்றவர்களான—புலவரவர்களின் ஆசியைப் பெற்றவர்களான புலவர்மணி அவர்களும் பண்டிதமணி அவர்களும் இந்த நூற்றாண்டின் மத்திய காலம் முதல் இறுதியாக நான்கு தசாப்த காலம் வரை இரு தமிழ்விழிகளௌனவிளங்குகினார்கள் வடக்கே பண்டிதமணி அவர்கள். கிழக்கே புலவர்மணி அவர்கள்.புலவரவர்களைஅறிஞர்கள்பலர் எவ்வாறு பாராட்டினார்களோ அறுவாறே பண்டிதமணி அவர்களும் புலவர்மணி அவர்களும் பல்வேறு சந்தார்ப்பங்களில் தகுதியான பெருமக்களால் பாராட்டப் பட்டார்கள்.

தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப் பெற்ற நவாலியூர் சோமசுந்தரப்புலவர்கள் 'வண்டமிழிதமறி பண்டிதமணியியே' என்று அழைத்த தோடமையாது வாழ்த்துகின்றார்;

வற்றா மதுரச் செந்தமிழ்ப்
பாற்கடல் மதியே மத்
தாக
மாயா வுணர்வே வாசுகி
வடமாய் மதித்துழி
யுடனாகச்
சற்றே யெனினு மூனமிலா
தெழு
தண்ணமு தேதேனே
தண்டேன் சுவையே சாருஞ்
சுவையிற் றங்குஞ் சுக
விளைவே
கற்றார் விழையுங் கற்பக
தருவே
தருவிற் கனி கனியே
கனியினி லூறும் பலசுவை
நறவே கவிநயமுறு
மலையே
மற்றா ரும்புகழ் மாண்புறு
பண்பே
மட்டுவில் வளநகர் வாழ்
வண்டமி ழிதமறி பண்டித
மணியே
வாழி வாழியவே.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாடிய பதிகங்களில் மண்டூர்ப்பதிகமும் ஒன்று. தில்லைமண்டூர்ப் பதிகத்தினைப் படித்துச் சுவைத்தவரான முத்தமிழ் விரகர் விபுலாந்த அடிகளார் புலவர்மணியின் தொண்டினைப் பாராட்டுகின்றார். புலவர்மணி அவர்களைக்கலை வல்லோனாகக்காணுகின்றார் விபுலானந்த அடிகளார் இப்பாடல் திருமுருகன் சிறப்பை வியந்து கூறுவதுடன் புலவர்மணி அவர்களின் கவித்துவ சக்தியையும் எடுத்துக் காட்டுகின்றது.

மண்டூரும் முகிற்குலங்கள்
எமதிறைவர் மருகர்
திருப்பதி
யீதென்ன விண்டூர மழை
பொழியுஞ்
சிறப்பதனால் வளம்
மலிந்து மிகுந்து
தோன்றும் மண்டூரி லுறை
முருகன்
மலரடிக்கோர் திருப்பதி
கம் மரபிற்
சொற்றான் கண்டுரு மினிய
மொழிப்
பெரியதம் பிப்பிள்ளை
யென்னும்
கலைவல் லோனே

## புலவர்மணி

'பண்டிதர் பெரியதம்பிப் பிள்ளையாக விளங்கியவர், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஆவதற்கு இடையில் அவர் பெற்ற பட்டங்கள் பலப்பலவாகும். எனினும் ஏனைய சிறப்புப்பட்டங்களையெல்லாம் உதறிவிட்டு 'புலவர்மணி' என்ற ஒரே ஒரு பட்டத்தை மட்டுமே அவர் விரும்பித் தமது பெயரின் முன்னால் இறுதி வரை இணைத்துக் கொண்டார்.'

தினபதி சிந்தாமணி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு.எஸ். டி. சிவநாயகம் உள்ளதும் நல்லதும் என்ற நூலின் முன்னுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பண்டிதமணி

1951 இல் யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் தமிழ்விழா நடந்தசமயம் 'தமிழ் நுதலியது களவு, களவியல் நுதலியது தமிழ்' என்ற தலைப்பில் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பேசினார். அதனையடுத்து 'தமிழ்ச்சாறு' என்று மகுடமிட்டுத் தினகரன் ஆசிரியத்தலையங்கம் தீட்டியது. பண்டிதர் சி. கணபதிப் பிள்ளை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை என்று அழைக்கப்படலானார். இதற்கு முன்னரும் பின்னரும் பல பட்டங்கள் அவரை வந்து சேர்ந்தன. எனினும் பண்டிதமணி என்ற பட்டமே வழக்கில் பெரும்பாலும் அமைவதாயிற்று.

'பண்டிதமணி என்றவுடன் உடனடியாக எமக்கு நினைவில் வருவது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் வழிவந்த சைவத்தமிழ்க்கல்விப் பாரம்பரியமாகும். அந்நிய சமய ஆதிக்கம் ஈழத்தமிழர் பண்பாட்டில் ஆதிக்கம் செலுத்த முற்பட்ட ஒரு சூழலில் அதற்கு எதிராகச் சைவக்காவலராக முன்னின்று இயக்கம் நடத்திய தலைமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவர் அப்பேரியக்கத்துக் தமது கருவியாகத் தமிழ்க் கல்வியை வளர்த்தவர். அவ்வாறு அவர் வளர்த்த தமிழ்க்கல்வி மரபை நமது தலைமுறையுடன் இணைத்து நின்ற வரலாற்றுப் பாத்திரமாக அமைந்தவர் பண்டிதமணி அவர்கள்.

நாவலரின் மாணவர்களாகிய சுன்னாகம் சு.குமாரசுவாமிப் புலவர், த. கைலாசபிள்ளை ஆகியோரிடம் பாடங் கேட்டவர் என்ற வகையில் நாவலரின் கல்விமரபு பண்டிதமணி அவர்களுக்கு முதுசொத்தாகும். நமது தலைமுறைக்கு அம்முது சொத்தைக் காப்பாற்றித் தந்த பெருமை பணடிதமணிக்கு உரியது.

யாழ் பல்கலைக்கழக முன்னை நாள் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணிமம் வித்தியானந்தன் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## இருமணிகள்

ஈழத்தின் இருமணிகளான புலவர்மணி அவர்களும் பண்டிதமணி அவர்களும் இணைந்தும் தனித்தனியாகவும் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை. புலவர்மணி அவர்கள் கவிதைத்துறை மிகவும் கைவந்தவர், பண்டிதமணி அவர்கள் சிறந்த சிந்தனையாளர். இவர்களது எழுத்தும் பேச்சும் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் நல் விருந்தாயமைந்தன. இவர்கள் இருவரும் இயற்றிய நூல்கள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய அறிவுக் களஞ்சியங்கள். தனங்கிளப்பு காரைத்தூவி நாயகரதும், தில்லை மண்டூர்த் திருமுருக

12ம் பக்கம் பார்க்க

**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்**

# உணவும் அழகும்

ஒருவருடைய அழகு அவர்களுடைய ஆகாரத்திலேயே அடங்கியுள்ளது என்றால் அது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை அதுதான். அழகு அதிகமாக 'எதைச்சாப்பிடுவது, எதை அருந்துவது? கேள்வி எளிது. ஆனால் பதில் பெரியது. குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான தண்ணீர் மட்டும் குடித்தாலே போதும். இலகுவானது, எப்போதும் கிடைப்பது. ஜீரண உறுப்புகள் வேலை செய்ய உதவுவதோடு குடலைச் சுத்தப் படுத்தவும் செய்கிறது தண்ணீர். இதனால் மேனி நல்ல நிறம் பெறுகிறது.

பால் அநேகமாக எல்லோருக்கும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரு பொருள். சருமத்தை மிருதுவாக்கவும் வெளுப்பாக்கவும் செய்யும் குணம் பாலுக்கு உண்டு. சாதம், ரொட்டி, கேக் முதலிய புரதச் சத்து மிகுந்த ஆகாரங்களையே நாம் அதிகமாக உண்கிறோம். இவற்றோடு ஒவ்வோர் ஆகாரத்துடனும் பழங்களைப் பச்சையாகவோ, பக்குவப் படுத்தியோ சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பழங்களை அதிகம் உண்பவர்களுக்கு டாக்டர் பில் குறைவு. செயற்கை அழகுச் சாதனங்களுக்குச் செலவழிக்கும் பணமும் மிச்சம். ஆரஞ்சு, மா, கொய்யா, ஆப்பிள், திராட்சை, வாழை – எல்லாப் பழங்களுமே ரத்தத்தைச் சுத்தம் செய்கின்றன, நரம்புகளை முறுக்கேற்றி விடுகின்றன. ஜீரண உறுப்புக்களைச் செம்மையாக்குகின்றன. இதனால் உங்கள் கன்னங்களில் பளபளப்பும் முகத்தில் மினுமினுப்பும் கூடுகிறது. நம் உடலுக்குத் தேவையான சர்க்கரை முழுதும் பழங்களிலேயே இருக்கிறது.

அதே மாதிரி எல்லா வகையான பச்சைக் கறிகாய்களையும் நிறையச் சாப்பிட வேண்டும். கிழங்கு வகைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். கீரைகளில் பசளைக் கீரை மேனி பளபளக்க உதவுகிறது. பசளைக் கீரையில் ஏராளமான இரும்புச் சத்து இருக்கிறது. இரும்புச் சத்து மாத்திரைகளையும்டானிக்குகளையும் விடப் பசளைக் கீரை, மலிவானது, சுலபமாகக் கிடைப்பது. மரக்கறி உணவினால் தான் மேனி அழகு கூடும்.

# அறிந்து கொள்ளுங்கள்

இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

உலகில் முதன் முதல் பத்திரிகை வெளியிட்ட நாடு பிரான்ஸ்.

உலகின் மிகப்பெரிய தீவு அவுஸ்திரேலியா.

வானியல் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் கலிலியோ கலிலி.

அயடீன் எனும் மூலகத்தைக் கண்டு பிடித்தவர் கோரோயிசு.

-கதிர்களைக் கண்டுபிடித்தவர் ரோஞ்சன்.

புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தவர் நியூற்றன்.

கு. இளங்கோபன்




# பேறு பதினாறு

(1) புகழ்
(2) கல்வி
(3) வலிமை
(4) வெற்றி
(5) நன்மக்கள்
(6) பொன்
(7) நெல்
(8) நல்வினை
(9) நுகர்ச்சி
(10) அறிவு
(11) அழகு
(12) பொறுமை
(13) இளமை
(14) துணிவு
(15) நோயின்மை
(16) வாழ்நாள்

# ஆத்திசூடிக்கு சேர் பொன். இராமநாதன் உரை

காப்பு

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித்தொழுவோ மியாமே:

திருவாத்திப் பூமாலையைத் தரிப்பவராகிய சிவ பெருமான் விரும்பிய பிள்ளையாகியவிநாயகக் கடவுளைத் துதித்து வணங்குவோம் நாங்கள் என்றவாறு.

**அறஞ்செய விரும்பு.**
தருமத்தைச் செய்தற்கு நீ ஆசை கொள்ளு.

**ஆறுவது சினம்**
உன்னுள்ளே தணியவேண்டுவது கோபமே ஆம்.

**இயல்வது கரவேல்.**
கொடுப்பதற்கு இசைவதை நீ வறுமையினாலே யாசிப்பவர்களுக்கு ஒளியாதே.

**ஈவது விலக்கேல்.**
தருமத்தைக் குறித்து ஒருவநக்கு ஒருவர் கொடுப்பதை நீ தடுக்காதே.

**உடையது விளம்பேல்.**
உனக்கு உள்ள பொருளை நீ மற்றவர் அறியும்படி சொல்லாதோ.

**ஊக்கமது கைவிடேல்.**
செய் தொழில் மனஞ் சோராமையை நீகைவிடாதே

**எண்ணெழுத் திகழேல்.**
கணித நூலையும் இலக்கண நூலையும் நீ இகழ்ந்து தள்ளாதே.

**ஏற்ப திகழ்ச்சி**
ஒருவரிடத்திலே போய் இரப்பதுபழிப்பாகும்.
(சித்தவைத்திய மூதறிஞர் ஐயம்பிள்ளை பேரம்பலம் நூலில்இருந்து)

# முரசொலி பூந்தோட்டம்

## அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:-.........................................

வயது:-.........................................

பாடசாலையின்

பெயர்:- .........................................

கல்வி கற்கும் வகுப்பு:- .........................................

வீட்டு முகவரி:- .........................................

கையொப்பம்:- .........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதின்நான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# சிட்டுக்குருவி பறக்கிறது

சிட்டுக் குருவி பறக்கிறது—அது
சின்ன இறகை விரிக்கிறது
வட்டம் போட்டுப் பறக்கிறது—அது
வான் வெளியை அளக்கிறது
பட்டுப் போல மேனி யது—அது
பாரம் எதுவுமே இல்லாதது
இச்சையுடனே வானத்திலே—அது
இறகடித்துப் பறக்கிறது

செல்வி யசோதா சிவப்பிரகாசம்
அங்கத்தவர் இல 361

# நாடுகளும் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| இலங்கை | — | கொழும்பு |
| இந்தியா | — | புதுடில்லி |
| பாகிஸ்தான் | — | இஸ்லாமாபாத் |
| பங்களாதேஷ் | — | டாக்கா |
| ஆப்கானிஸ்தான் | — | காபூல் |
| மாலைதீவு | — | மாலே |
| நேபாளம் | — | காட்மண்ட் |
| இந்தோனேசியா | — | ஜகர்த்தா |
| பிலிப்பைன்ஸ் | — | மணிலா |
| மே.ஜேர்மனி | — | பொன் |
| பிரான்ஸ் | — | பாரீஸ் |
| ரஷ்சியா | — | மாஸ்கோ |
| ஆஸ்திரேலியா | — | கன்பரா |
| அமெரிக்கா | — | வாஷிங்டன் |
| சீனா | — | பீககிங் |
| சாம்பியா | — | லுசாக்கா |
| கென்யா | — | நைரோபி |
| கியூபா | — | ஹலானா |
| லிபியா | — | திரிப்பொலி |
| ஈரான் | — | தெஹரான் |
| ஈராக் | — | பாக்தாத் |
| எகிப்து | — | கெய்ரோ |
| சிம்பாவே | — | ஹராரே |
| தென்னாபிரிக்கா | — | ஜொகானஸ்பேர்க் |

சி.சசிதரன்

# அறிஞர்களின் அறிவுரைகள்

''எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் போனபடி விட்டுவிடாமல் பேச்சிலும், காரியத்திலும் அடக்கம் இருக்கவேண்டும். எவ்வளவு கல்வியும், செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை. ராஜாஜி

ஒரு பொருளுக்கு அழகு உண்டாயின் அவ்வளவுக்கு அதனுள்ளே அது அமைந்திருக்கிறது, பிறர் போற்றுவதனால் அது உண்டாவதல்ல, பிறர் கண்டு வியப்பதால் அதன் அழகு அதிகமாவதுமில்லை, குறைவதுமில்லை, மார்க் அரேலியர்.

''நான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவன் நான் எவ்வளவு அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைக்கிறேனோ அவ்வளவு அதிகமாக அதிர்ஷ்டமும் என்னை வந்து சேருவதைக் கண்டு பிடித்திருக்கிறேன்.

ஸ்டீபன்லீகார்டு

''உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்விப் பொருளையும், செல்வப் பொருளையும் தேடுவதில் ஒவ்வொரு நாளையும் வாழ்நாளின் இறுதிநாளாகவே நினைத்து இன்றைக்குச் செய்யத்தக்கதை நாளைக்குச் செய்யலாமெனக் காலக்கழிவு செய்தல் கூடாது. அக்பர்

தொகுப்பு எம் எம்
அபூபக்கர் மன்னார்

# மின்விளக்குக் கண்டுபிடிப்பு

அறிவியல் மேதை எடிசன் மின் விளக்கைக்கண்டு பிடித்ததும்அதைப் புதுமையான முறையில் மக்களுக்கு விளம்பரம் செய்ய விரும்பினார். அதற்காக 1880ம் ஆண்டு தமது ஆராய்ச்சிக் கூடமான மென்லோ பார்க்கில் 520 மின்சார பல்புகளை அமைத்து மாலையில் அவற்றை எரிய வைத்தார். அக்காலத்தில் காஸ் விளக்குகள்தான் புழக்கத்தில் இருந்ததினால் நெருப்பில்லாமல் எரியும் இந்த மின் விளக்குகளைக் காண மக்கள் கூட்டம் அலை மோதியது. இதற்கென நியூயார்க்கிலிருந்து, மென்லோ பார்க்கிலிருந்து விசேட ரயில்கள் விடப்பட்டன. மின் விளக்குகள் கண்டுபிடிக்கப் பட்டதினால் காஸ் லைட்டுக்களின் காலம் முடிந்து விட்டது என்று மக்கள் கருத ஆரம்பித்தனர். இதனால் காஸ் லைட்டுக்களை உற்பத்தி செய்யும் கம்பெனிகளின் பங்கு விலை சரிய ஆரம்பித்தது.

# தேயிலையும் ஜப்பானும்

ஜப்பானுக்குத் தேயிலைப்பானம் எப்போது சென்றது? யார் கொண்டு போனார்கள்தேயிலையை? டெங்கியோ டெய்ஷி என்ற புத்தபிட்சு 805ம் ஆண்டு கடல் கடந்து ஜப்பானுக்கு வந்தார். அவர் தன்னுடன் கொண்டுவந்திருந்த தேயிலை விதைகளைப் புத்தவிஹாரையின் நந்தவனத்தில் ஊன்றினார். தேயிலைவிதைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தன. 815ம் ஆண்டு ஜப்பானிய மன்னர் சாகா ஒரு தடவை புத்த விஹாரைக்கு வந்தார். வரவேற்பின்போது மன்னருக்குத் தேயிலை வழங்கப்பட்டது. அதன் சுவை மன்னருக்கு ரொம்பப் பிடித்திருந்தது. தன் தலைநகருக்கு அருகிலுள்ள மாகாணங்களில் தேயிலையைப் பயிரிடும்படி ஆணை பிறப்பித்தார். 10 ம் நூற்றாண்டில் ஜப்பான் தனக்குத் தேவையான தேயிலையைச் சீனாவிட மிருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தித் தானே பயிரிட்டுக்கொள்ளும் தன்னிறைவைப் பெற்றது.

# இனிய நகைச் சுவையால் சிந்திக்கத் தூண்டுபவர்



சிரித்திரன் சிவஞானசுந்தரம்

"அந்தப் பெண்ணைப் பார்த்தால் பசிதீரும் 'என்று ஒருவர் மற்றவருக்குச் சொல்கிறார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிச்சைக்காரன் '' எங்கேஐயா அந்தப் பெண் இருக்கு நான் பத்து நாள் பட்டினி'' என்கிறார்.

இந்தக் கருத்துள்ள நகைச்சுவைக்குச் சொந்தக்காரரர் யாராக இருக்கும்.வேறு யாருமல்ல சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் தான்.


ஈழத்தில் முதன்முதலில் நகைச்சுவைச் சஞ்சிகையை வெளியிட்ட பெருமை திரு. எஸ். சிவஞானசுந்தரத்தையே சாரும். 1965 ஆம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் பதினைந்தாம் திகதி சிரித்திரன் என்ற பெயரில் காட்டூன் சஞ்சிகையைச் சுந்தர் வெளியிட்டார்.

ஈழத்தில் சஞ்சிகை வெளியிடுவது என்பது சுலபமான காரியமன்று. அது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று கூடக் கருதப்பட்டு வந்த காலத்தில் முற்று முழுதாக, நகைச்சுவையாகக் காட்டூன் சஞ்சிகையை வெளியிடுவது என்றால்... சுந்தரது மனத்துணிவை எப்படிப் பாராட்டுவது......

றதுஎன்று எழுதினார். இந்தக் கடிதத்தைக் கோமாளிகள் ஆசிரியர் குழு கவனத்திற்கு எடுத்து அவர் எழுதிய கடிதத்தையும் தமது கோமாளிகள் சஞ்சிகையில் பிரசுரித்ததோடு தமது விளக்கத்தையும் கூறி உடனடியாகவே உலகின் முதல் தமிழ் நகைச்சுவை மாத இதழ் என்ற வாசகத்திற்குப் பதிலாக உலகின் முதல் தமிழ்க் கேலிச்சித்திர மாத இதழ் என்று மாற்றி வாசகத்தைப் பிரசுரித்திருந்தார்.

அச் சஞ்சிகையின் அட்டையில் முதலில் உள்ள வாசகத்தையும், பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் எழுதிய கடிதத்தையும், அதற்கு கோமாளிகள் ஆசிரியர் கொடுத்த விளக்கத்தையும், பின் மாற்றம் செய்து சஞ்சிகையில் வெளியிட்ட வாசகத்தையும் படத்தில் காணலாம்.

இச் சந்தர்ப்பத்தில் பேராசிரியரைப் பாராட்டுவதோடு வாசகரின் கடிதத்திற்குப் பத்திரிகை கொடுக்கும் மதிப்பிற்குக் கோமாளிகள் சஞ்சிகை சிறந்த உதாரணமாகும்.



சிவஞானசுந்தரமும் துணைவியாரும்

சஞ்சிகையைவெளியிடுவதற்கேபெருமளவுபணம் தேவை. அதுவும்காட்டூன் சஞ்சிகைஎன்றால் புளக்செய்வதற்கே பெருமளவு பணம் வேண்டும். இப்படியான நிலையில் துணிவுடன் ஈழத்தில் முதலாவது நகைச்சுவைச் சஞ்சிகையைச் சுந்தர் வெளியிட்டார்.

இச் சஞ்சிகை ஈழத்தில் வெளிவந்த முதலாவது நகைச்சுவைச் சஞ்சிகை என்ற பெருமையைப் பெறுவதோடு உலகில் முதல் தமிழ் நகைச்சுவை இதழ் என்ற பெருமையையும் பெறுகின்றது.

மலேசியாவிலே 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி கோமாளிகள் என்று நகைச்சுவை மாத இதழ் ஒன்று வெளியாகியது. அட்டையிலே உலகின் முதல் தமிழ் நகைச்சுவை மாத இதழ் என்று எழுதப்பட்டிருந்தது.

இதனை அப்போது மலேசியாவில் தங்கியிருந்த பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் கோமாளி இதழில் குறிப்பிட்டிருக்கும் வாசகத்தைப் பார்த்து மனம் வெதும்பிக் கோமாளிகள் சஞ்சிகையின் ஆசிரியருக்கு இவ்வாசகம் பிழை. ஈழத்தில் இதற்கு முதல் சிரித்திரன் என்ற சஞ்சிகை வெளிவருகி

ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் புகழ் பெற்றவர் சிரித்திரன் சுந்தர். ஈழத்துச் சஞ்சிகைகளை இந்தியர்கள் விரும்பி வாசிக்காத காலகட்டத்தில் சிரித்திரனுக்குச் சந்தா செலுத்தித் தவறாமல் இந்தியத் தமிழர்கள் விரும்பி வாசித்தார்கள் என்றால் சிரித்திரனுக்கும், சிரித்திரன் சுந்தருக்கும் கிடைத்த பெருமையாகும்.

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**

தமிழ் கூறும் நல்லுலகில் தனக்கென்று தனி இடத்தைப் பிடித்தவரான திரு. எஸ் சிவஞானசுந்தரம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

1965 செப்ரெம்பர் மாதம் வெளிவரத் தொடங்கிய சிரித்திரன். சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து 1987 ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் ஓய்வெடுத்துக் கொண்டது.

சிரித்திரன் ஓய்வு எடுத்தாலும் சிரித்திரன் இன்றும் எம்மை சிரிக்க வைத்துக் கொண்டு தான் இருங்கின்றான்.

மகளுக்கு சீதனம் கொடுத்துக் கல்யானம் பண்ணி வைத்தாயே பணம் எப்படிக் கிடைத்தது?

சீதனக் கொடுமையை மையமாக வைத்து ஒரு நாவல் வெளியிட்டேன். நல்ல விற்பனை. அந்தப்பணத்தைச் சீதனமாகக் கொடுத்து மாப்பிள்ளை எடுத்தேன்.

இந்த நகைச் சுவையில் எத்தனை அர்த்தங்கள் இருக்கின்றன பார்த்தீர்களா? இது சிரிக்க வைத்த நகைச் சுவை மட்டுமல்ல சிந்திக்க வைத்த நகைச்சுவையும் கூட.

டாக்டர்:- உள்ளதைச் சொல் இந்தக் காயம் எப்படி ஏற்பட்டது?

ஒருவர்: மனைவியில் நான் குற்றம் சுமத்தவில்லை. குரு மாற்றம் எனக்கு கூடாது.

எப்படி நகைச் சுவையால் கருத்துக்களை வாசகர்களிடையே அறிஞர் புதைத்தார் பாருங்கள்.

நாம் அறிஞர் அவர்களிடம் நீங்கள்எப்போது கார்ட்டூன் வரைய ஆரம்பித்தீர்கள் உங்கள் குருநாதர் யார்? உங்கள் முதலாவது கார்ட்டூன் எந்தச் சஞ்சிகையில் வெளிவந்தது. எந்த வகையான கார்ட்டூன் என்பதைச் சற்று விளக்கமாகச் சொல்வீர்களா என்று கேட்ட போது,

எனக்குகார்ட்டூன்துறையில் குருநாதர் என்று எவரையும் சொல்ல முடியாது. ஆனால் ஆனந்த விகடனில் கார்ட்டூன் வரையும் 'மாலி' அவர்களின் கார்ட்டூனைவிரும்பிரசிப்பேன்

நான் முதன் முதலில் பிளிற்ஸ் (BLITZ) இந்திய ஆங்கில சஞ்சிகைக்கு 1962 ஆம்ஆண்டு கார்ட்டூன் வரைந்தேன்.வின்ஸ்டன் சேர்ச்சிலும் நிசாம் ஒவ்ஹைட்ர பாட்டும் இந்தியாவுக்கு எதிராக சதி ஆலோசனையில் ஈடுபடுவதையே அந்தக் கார்ட்டூன் சித்தரித்தது.

இரண்டு எலிகள் ஒரு எலியின் முகம் வின்ஸ்டன்சேர்ச்சிலைப் போன்றும் மற்றைய எலியின் முகம் நிசாமைப் போன்றும் வரைந்து இரண்டும்சதிஆலோசனையில் ஈடுபடுவது போன்றுகார்ட்டூன் அமைந்தது.

இச் சஞ்சிகைக்கு முதன்முதலில் கார்ட்டூன் வரைய ஆரம்பித்த கொஞ் (CONCH) என்ற இந்திய ஆங்கில சஞ்சிகைக்கும், அதனைத் தொடர்ந்து இலங்கையில் சமசமாயிஸ்ட் என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கும், அதன் பின்னர் ரைண்ட் (TRINE) என்ற ரோஜா குணவர்த்த அவர்களின் பத்திரிகைக்கும் பீப்பிள்ஸ் வோய்ஸ் பத்திரிகைக்கும் கார்ட்டூன் வரைந்தேன்.

அதன்பின் தமிழ் பத்திரிகைகளான சுதந்திரன், தினகரன் வீரகேசரி, ஈழமுரசு, முரசொலி ஆகியவற்றுக்கும் கார்ட்டூன் வரைந்தேன்.

சிரித்திரனை காட்டூன் சஞ்சிகையாக வெளியிட்டு வந்தேன். சிரித்திரனை ஒரு குடும்பக் கைத்தொழிலாகச் செய்து வந்தேன்.

நீங்கள் படைத்த பாத்திரப் படைப்புக்கள் பற்றி அதாவது. நீங்கள் படைத்த பாத்திரங்கள் எவற்றை மையமாகக் கொண்டன. உங்களுக்கு புகழைத்தேடித்தந்த பாத்திரங்கள் எவை என்று இப்போது உங்களால் நினைவுபடுத்திக் கூறமுடியுமா என்று நாம் கேட்டபோது, தினகரனில் தொடராக வெளிவந்த சவாரித்தம்பர் பாத்திரத்தை என்னால் இலகுவில் மறந்துவிட முடியாது. சவாரித்தம்பர் என்று ஒருவர் நெல்லியடியில் வசித்து வந்தார். இவர் ராமசாமிப் பெரியார் வழிவந்த பிரமுகர். சீர்திருத்தக் கருத்துக்களையே பேசிவந்தவர். அதனை செயலிலும் காட்டிய பொது உடமைவாதி இவரை மனதில் வைத்துக்கொண்டு நான் சவாரித்தம்பர் பாத்திரத்தை உருவாக்கி சாதிஒழிப்பு, மூட நம்பிக்கை, கலாசாரச் சீரழிவு ஆகிய பிரச்சனைகளை நகைச்சுவையாகச் சொல்லி வந்தேன். சவாரித்தம்பர் பாத்திரம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

தினகரனில் சித்திரகானம் என்ற பகுதிவாயிலாகக் கருத்துக்களை மக்களிடையே பதிய வைக்க விரும்பினேன். சினிமாவுக்கூடாகக் கருத்துக்களைச் சொன்னால் அது மக்களிடையே சென்றடையச் செய்வது சுலபம். இதனால் நான் சினிமாப்பாடல்களை வைத்து சித்திரகானம் பகுதி வாயிலாகக் கருத்துக்களைச் சொன்னேன்.

மித்திரனில் மைனர் மச்சான் என்ற பாத்திரத்தை உருவாக்கி இளைஞர்களின் சேட்டைகளை, சோகக்கதைகளைச் சுவையாக சொல்லி வந்தேன்.

சிரித்திரனில் Mrs. டாமோடிரன் பாத்திரத்தை ஆரம்பித்து தமிழ் ஆங்கிலம் கலப்பதைச் சுட்டிக்காட்டினேன். இப்பாத்திரத்தை ஆரம்பித்த கதை சுவையானது. நான் கொழும்பில் வாடகை வீட்டில் இருந்த சமயம் பக்கத்து அறையில் டாமோடிரன் என்பவரும் அவரது மனைவியும் குடியிருந்தார்கள். அவர்கள் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்துதான் பேசுவார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். வட் இஸ் கடைச்சங்கம் டாலிங் இப்படி அவர்கள் தமிழைக் கொலை செய்வதைப்பார்த்து சகிக்க முடியாமல் இந்தப் பாத்திரத்தைஉருவாக்கித் தமிழ் நாகரிகத்தை உதாசீனம் செய்பவர்களைச் சாடி வந்தேன். கோப்பறேட்டிப்ஸ்ரோர்ஸ் இஸ் கடைச்சங்கம் இதுபோன்ற நகைச்சுவை உரையாடல்கள் இடம் பெற்றன.

கார்ட்டூன்என்று குறிப்பிடுகின்றார்களே இதற்குச் சரியான தமிழ் பிரயோகம் என்ன என்று சொல்ல முடியுமா என்று சுந்தர் அவர்களிடம்கேட்டதற்கு கார்ட்டூன் என்பது சிந்தனையைத் தூண்

12ம் பக்கம் பார்க்க

உலகின் முதல் தமிழ் நகைச்சுவை மாத இதழ்

## கோமாளி

MAJALAH HUMOR - KOMALI - PP 112/12/84 ஜூன்: 85 இதழ்-1

### உலகின் முதல்... ... அல்ல!

உங்கள் "கோமாளி" நகைச்சுவை இதழ்-2 பார்த்து பரவசமடைந்தேன். நல்ல முயற்சி. எனது வாழ்த்துக்கள்!

எனினும் "உலகின் முதல் தமிழ் நகைச்சுவை மாத இதழ்" என்று அட்டையில் போட்டிருக்கிறீர்கள். இலங்கையில் பல வருடங்களாக (10க்கு மேல் என நம்புகிறேன்) சிரித்திரன் என்ற முழுமையான தரமுள்ள நகைச்சுவை மாத இதழ் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே "கோமாளிக்கு" ஒரு அண்ணு உண்டு. சிரித்திரன் மிகவும் பிரபல்யமான பத்திரிகை. ஆகவே "உலகின் முதல் ........" என்பதை தவிர்க்கவும்.

வேறு ஒரு நல்ல வாக்கியம் மூலம் அறிமுகம் செய்யவும். அழகும் தரமும் உள்ள உங்கள் பத்திரிகை எவ்விதத்திலும் குறையமாட்டாது.

ஆசிகளுடன்
செ. சிவஞானசுந்தரம்
"நந்தி"

குறிப்பு:-

உங்கள் கடிதற்திற்கு நன்றி ஐயா ஈழத்திலிருந்து "சிரித்திரன்" வெளிவந்திருப்பதை நாங்கள் அறிவோம். அங்கதம் அல்லது எள்ளல்_நடையில் (SATIRE) முறையில் துள்ளக்கும் வெளி வந்துகொண்டிருக்கிறது. கேலிச்சித்திரங்களுக்கு (CARTOON) முக்கியத்துவம் வழங்கி வருவதில் கோமாளி முதல்வன் என்பதால் அவ்வாறு சொற்றொடரைப் பயன் படுத்தினோம்! இனி கோமாளியில் உலகின் முதல் தமிழ் கேலிச்சித்திர மாத இதழ்" என்று வெளியிடுகிறோம். இதுவும் ஏற்புடையதல்ல வெனில் மாற்றம் செய்ய பணிவோடு காத்திருக்கிறோம்!

கோமாளி
ஆசிரியர் குழு

உலகின் முதல் தமிழ் கேலிச்சித்திர மாத இதழ்

## கோமாளி

MAJALAH HUMOR KOMALI - PP 112/12/84 ஆகஸ்ட்: '85 இதழ்-3 விலை $ 1.20

## தீந்தமிழ்த் திருக்குறள்

ஆதிமநு நூலைத் —திருத்தி
அமைத்த நன்னூலாம்;
சாதி மத பேதம் —கடந்த
சங்கம் தருநூலாம்

எத்திக்கும் போற்றும் — நல்ல
தித்திக்கும் செந்தமிழில்
வழுக்கள் போக்க— வந்த
ஒழுக்கசீர் மாமறையாம்

இருளினில் அலைபவர்க்கோ — ஒளி
நிறை பொன்நூலாம்;
இருமையில் நிறைபயன் — சொல்
நீதிப் பொதுமறையாம்

அரசியல் கூறிடும் — மொழி
அறிவுரை பகர்ந்திடும்:
பற்பல மொழியினில் — உறை
புவியினில் நிகரிலா நூலாம்

புத்தகம் பலநூறு —புரட்டி
புத்தி தடுமாறுவதேன்?
வள்ளுவன் படைத்ததிரு — குறளை
வாயாரச் சுவைத்திடுவீர்

சத்தியன்

## மாரி மெல்லத் தொடங்கவே...!

மழையும் மெல்லத் தொடங்கவே
மண்ணும் நன்கு நனையுமே!
விளையும் வயலின் உழவர்கள்
விரைந்து நிலத்தை உழுவரே!

★ ★

ஓட்டில் உறங்கும் நத்தைகள்
உலகில் நகரத் தொடங்குமே!
கூட்டை நோக்கில் புட்குலம்
குவிந்து பறந்து செல்லுமே!

★ ★

ஈரங் கண்ட புழுக்களும்
இளகும் மண்ணைத் துளைத்துமே
வீர வலமாய் வந்துதாம்
விரைந்து நகர்ந்து மகிழுமே!

★ ★

இலையிற் தேங்கும் நீரிலே
இறக்கை நனைத்துக் குருவிகள்
கலைத்து நீரைச் சிந்தியே
களிக்குங் காட்சி சிறக்குமே!

★ ★

முட்டை கொண்டு எறும்பினம்
முனைந்து கோவை போலவே
திட்டை நோக்கி வேகமாயத்
தேர்ந்து வளையை நாடுமே!

பண்டிதர் ந. கடம்பேசுவரன்

## ஈந்தவர் நிலைத்தார்

மரணந்தான் வருமென்ற போதுங் கூட
மறுக்காமற் கொடுத்தார்கள் எங்கள் முன்னோர்
இரப்பதனிற் கீழாகப் பொருளைச் சேர்த்து
ஈயாது வைத்தவனை எண்ணினார்கள்

இல்லாமை வந்துற்ற போதும் ஈந்தோர்
இலக்கியத்தில் நிலையாகி மேன்மை பெற்றார்
பொல்லாத குணத்தாலே புதைத்து வைத்தோர்
போனவழி எவ்வழியோ அறியோம் ஐயா!

பேரோடு புகழ்சேர்ந்து வருமென்றாலே
பெரும்பணத்தைக் கண்மூடி வீசு வோர்கள்
சீரான நற்செயல்கள் செய்வதற்குச்
சிறிதும் முன் வருவதில்லை ஏனோ சொல்லும்?

சாமியுண்டோ? சரிதானோ? அறியே னேனும்
தரையினிலே ஏழ்மையினால் வாடு வோர்க்கு
ஈவதினால் வருகின்ற மகிழ்விற் பார்க்க
எதுவும் நான் பெரிதாக அறிந்தேனில்லை.

உங்களுக்கும் இல்லாமற் கொடுக்கச் சொன்னால்
ஒருபோதும் நடக்காது உண்மை ஆனால்
மிஞ்சுவதிற் சிறிதேனும் ஈவீ ராகில்
மேன்மையுறும் உம்வாழ்வும் மற்றோர் வாழ்வும்

பா. மகாலிங்கசிவம்

# கவியரங்கம்

## தெய்வநிலையே

கார்கொண்ட
கலைமானின்
கண்களில்
முத்தான
மோகனப்
முத்தங்கள்
செவ்வாழைக்
செந்தூரக்
செங்கனி
இல்லாத
நில்லாது
அல்லிக்
கொல்லாது
கோபுரம்
கோதையைச்
முந்நூறு
மூழ்கியே
மாறுநான்
கல்லாத
சொல்லாத
இல்லாத
இன்றுநான்
நன்றென்று
என்றுமிது

கூந்தலும்
சாயலும்
பேசுமொழியும்
பற்களும்
புன்னகையும்
கொட்டுமிதழும்
கால்களும்
கன்னமும்
வானமொழியும்
இடையுடன்
சாய்கின்ற
கொடியாமவள்
கொல்கிறாள்
தனில் அந்தக்
சேர்த்தணைத்து
முத்தங்கள்
தித்திக்கு
செய்து விடுவேன்
காதலும்
சொற்களும்
இந்த நிலையே
தேடினேன்
நாடினேன்
தெய்வநிலையே

வ. யோகானந்தசிவம்

★ ★

## தவில் மேதை தெட்சணாமூர்த்தி

கலைமகள் பயந்த மைந்தன்
கவினூறு கலையின் மேதை
தவிலுலகினில் அவன் செய் விந்தை
தனித்தன்மை தனியாவர்த்தனம்
அலைகடல் கடந்து சென்றும்
அழிந்திடாப் புகழ் சமைத்தோன்
தலைமகன் லயஞான குபேரனாந்
தெட்சணா மூர்த்தி நாமம்.

தவிலெடுத்துச் சபையமர்ந்தால்
தவில் பேசுமோ? விரல் பேசுமோ?
செவிதனிற் கேட்போ ரெல்லாஞ்
சித்திரப் பாவை யாவர்
எவரவர் எதிரில் நிற்பார்? இறைவன் தான்!
ஆடிடு நர்த்தனத்திற்கே
தவிலது இசைக்கச் சொன்னான்
தெட்சணா மூர்த்தி போனான்.

கரவையூர் கவிஞர்- தமிழகத்தான்

## உன்னோடு பேசுகிறேன்

நீ
சொல்லாமலேயே
உன்
தரிசனத்தை
நிறுத்தியதும்
நான்
பயந்துதான்போய்
விட்டேன்
உன்னைப்பற்றி
ஊருக்குள்
பல வதந்திகள்
ஆனாலும்
உன்னை
எப்படியும்
தரிசிப்பேன்
என்று
எண்ணியிருந்தேன்
நான்கு மாதங்களின்பின்
நீயும்
தரிசனம் தந்தாய்
ஆனாலும்
உன்னோடு
பேசும்
சந்தர்ப்பத்தை
அளிக்காதிருந்தாய்
கடந்தவாரம்
சம்மதப் புன்னகையுடன்
காட்சி தந்தாய்
இதோ
இன்று நான்
உன்னோடுபேசிவிட்டேன்
தொடர்ந்தும்
சம்பாஷிப்பேன்
இனி
நீ
தலைமறைவாகமாட்டாய்
என்ற நம்பிக்கை
எனக்குண்டு.

புலோலியூர் சந்திரசேகர்

## தமிழ் காப்போம்

கூனிக் குறுகிக்
கும்பிட்டு மற்றவரைக்
குமைந்து வழிபட்டுக்
குமுறலுடன்
நானிலத்தே
மானிடத்தின் ஜென்மமென
வாழ்ந்திட்டோம்
தமிழாகேள்
எண்ண முடியாத
இன்னலினால்
துன்புற்றோம்

ஊனில் உயிரில்
உறவாடும் நம் தமிழை
உலுத்தர் அழித்திடவே
உணர்வற்ற
பிணமானோம்
ஏனிந்த இழிநிலைகள்
எத்தனைநாள்
அவலங்கள்
இனியும் பொறுத்திடவா
எழுவாய் தமிழ்
காப்போம்.

சத்தியா மறவன்புலோ

## பிரியா அன்பு

கங்கை நதி
பாய்ந்து வரும்
ஓசை தனைச் சிரிப்பாக்கி ....
பொங்கு கடல் —
அலை போன்று
ஓயாத கதைபேசி......
ஊறி வரும் —
நீர் போன்று
அன்பதனை ஓடவிட்டு .....
கூடிவிட்ட உறவுதனை
நாடி வந்த உறவொன்று
நயமாக ஏழு நாட்கள்
நம்மோடு பழகிவிட்டு
போகையிலே மனமின்றி
போக விடை கூறிவிட்டு
செய்யும் வகை புரியாமல்
சென்ற திசை — பார்த்து
நின்றேன்
தெருவோரச் சந்தியிலே
பேரூந்து நிலையத்திலே

''வன்னிவளவன்''

## அவள்

அவளை
வடிக்கப்பட்ட சிலையென்று
நான் வர்ணித்தபடியாலோ
அவள் நெஞ்சில் இன்னும்
ஈரத்தைக் காணவில்லை...
அவளின் ஒவ்வோர்
இமைத் துடிப்பிலும்
என் இதயம்
வேகமாய் அடித்துக்
கொள்ளும்...
என்
கண்ணுக்குத் தெரிந்தவரை
அவள் எனக்கு வெகு
தூரத்தில்
எட்டாமல் இருக்கின்றாள்
அதனால்
அவளை
மறக்கலாமென்று
கண்ணை மூடிக்கொண்ட
போது
கண்ணுக்குள்ளே வந்து
என்னுக்குள்ளே நிற்கிறாள்...

அவள் சிரிப்பிலே
வாழ்க்கையைத் தோய்த்து
வரிஎழுத ஆசைப்பட்டு
வீணை...........
காய்ந்துபோன நாட்களை
காப்பாற்ற வாடி என்றேன்
அதற்காக
என் கண்ணில்
நீரை வரவழைத்து
அதில் நீந்த விட்டாளே

## விடிவு கிடைக்குமா?

காலம் வந்து
கை கொடுக்குமென்று
காத்து நிற்கும்
அனாதைச் சிறுவருக்கு
கலைந்திடாப்
பாசப் பிணைப்புக்கள்
கனவினில் கூடக்
கிடைப்பதில்லை.

பணத்திற்கு
மதிப்பளிக்கும் பாரினிலே
பாவம் இந்த
அனாதைச் சிறார்கள்.
உணர்வுகளின்
வெளிப்பாடுகள்ஒடுக்கப்பட்டு
உள்ளங்கள்
சித்திரவதைப் படுகின்றன.

சமுதாய விழிப்பில்
சார்ந்து நிற்போர்
சாவின் விழிம்பில்
தத்தளிக்கும் இந்த
அநாதைச் சிறார்களின்
விடிவுக்காக
ஆற்றாது உடன்
போராட வேண்டும்.

எஸ். ராஜ்மோகன்

## சமூக நவீனம்




## அத்தியாயம் நான்கு

யானைத் தந்தம் போல பிறைநிலா மேற்கு வானில் நட்சத்திரங்கள் புடைசூழ மிதந்து கொண்டிருந்தது. வெளிமுற்றத்தில் பரவியிருந்த மணலில் ரம்யாவும், சுகன்யாவும் கதைத்துக் கொண்டிருந்தனர். புகையிரத நிலையத்துக்கு ராஜசேகரனை பயணம் அனுப்பச் சென்றிருந்த செந்திலும் அவர்கள் கூடவேயிருந்தான். எத்தனை முயன்றும் முடியாமல் மனதுள் அடக்கி வைத்திருந்த கேள்வியை ரம்யா செந்திலிடம் கேட்டு விட்டாள்.

'என்னக்கா கேட்டனீங்கள்'?

'மாஸ்டர் ஏன் கொழும்புக்கு போகிறார் என்று உனக்குத் தெரியுமா'?

'ஏதோ இன்டவியூவாம் இந்த வேலை கிடைத்தால் ரீச்சிங்கிற்கு வரமாட்டாராம்.'

'அப்படி என்னடா பெரிய வேலை?'

'எடியுகேசன் டிப்பாட்மென்'டில் தான் என்னவோ 'சுப்பிரின்டன்ற் போஸ்ற்' என்றார்' என்று தனக்குத் தெரிந்தவற்றைக் கூறியபோது சுகன்யா ஏளனமாகச் சிரித்தாள்.

'நீ ஏன்டி சிரிக்கிறாய்?'

'அப்ப சிரிக்கவேண்டாமோ, அந்த மனிசிக்கு என்னக்கா பெயர்?'

,யாரடி?'

'வாசிகசாலைக்கு பக்கத்து வீட்டு மனிசி ஒருநாள் சொன்ன கதை ஞாபகத்திற்கு வந்தது. அது தான் சிரித்தனான்.'

'என்ன கதை?'

'அவளின்ரை தமயன்ரை மகன் ஏதோ சுப்பிரீண்டன்ரை சுப்பிரீண்டன் என்று கூறியபோது நீ கூடச் சிரிச்சியே அப்படித்தான் செந்தில் கூறுகின்றான்.'

'உனக்கு கதைக்கத் தெரியுமோ? அப்ப நீ சொல் பார்ப்பம்' என்று சுகன்யாவைக் கேட்டான் செந்தில்.

'அக்காவுக்கும், உனக்கும் ஏன்டா அவரை ஏதும் சொன்னா கோபம் வருகுது?'

'உனக்கு ஏன் அவரிலை இப்படி எரிச்சல்?'

'ஏனா ? அவருக்கு தலைக்கனம்,'

அவருக்கு தலைக்கனம் என்றால் உனக்கு என்ன நட்டம்? இப்ப அவர் எங்கடை சொந்தக்காரர். உன்ரை சேட்டைக் கதை அண்ணி காதில் விழுந்தால்......'

'என்னைப் பிடித்து விழுங்கி விடுவாவோ? அவை பெரிசு என்றால் அவைமட்டு, எனக்கென்ன பயம்?' என்றாள் சுகன்யா.

சின்னக்கா உன்ரை வாய் சரியில்லை. நீ பகிடி பகிடி என்று கதைத்து கடைசியில் ஒரு நாளைக்கு .....' என்றான் செந்தில்.

'நீ அவருக்கு வால் பிடிக்கிறாய் அதுக்காக நானும் அப்படி நடக்கணுமா?'

'உன்னை ......' அவன் மேலே கூறாமல் . நிறுத்தினான்.

'சொல்லேண்டா ஏன் நிறுத்தி விட்டாய்.'

'அண்ணி உன்னை தன் அண்ணாவுக்கு கல்யாணம் செய்யணும் என்று அண்ணாவிடம் கூறினா நீ கழுதை அவவை என்னவோ......'

'அவவுக்கும் நினைவுதான்' என்றாள் சுகன்யா.

'நீ பெரிய மகாராணி அண்ணி ஏதோ ஆசைப்பட்டு கூறினா மாஸ்டர் சம்மதிக்கணுமே?'

'அவருக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு? நான் சம்மதிக்கணுமே'

'நீ உன்னைப்பற்றி என்ன நினைச்சிட்டு இருக்கிறாய்?'

'டேய் செந்தில்...... 'என்று அவள் ஆரம்பிக்க 'சுகன்யா' என்று அவள் தொடையைக் கிள்ளினாள் ரம்யா.

'என்னக்கா நீ' என்றவள் பின்புதான் தன் தவறை உணர்ந்து மௌனமானாள்.

'அக்கா'

'ம்' என்று பெருமூச் செறிந்தாள்.

'என்னோடு கோபமா?'

'யாரோடு கோபித்து என்ன என் தலையில் எப்படி எழுதியிருக்கோ அப்படித் தானே நடக்கும்.'

'அக்கா உனக்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கின்றேன். சாட்சியின் காலைப் பிடிப்பதை விட எதிரியின் காலில் விழுவது நல்லது என்பார்கள் அவர் வரட்டும் நானே ......'

'வேண்டாம் சுகன்யா'

'சின்னக்கா நீ நினைக்கிற மாதிரியான ஆளில்லை அவர். அவர் ஒரு சாது. ஆனால் ரோசக்காரன். கோபம் வந்தால் ...உனக்கு ஒரு கதை தெரியுமா? எங்கடை பிறின்சிப்பல் கூட தன் மகளுக்கு சேகர் மாஸ்டரைக் கேட்டு பத்மா ரீச்சரை தூது அனுப்பினார்'

'அப்புறம்'

'இப்போதைக்கு நான் கல்யாணமே செய்யமாட்டேன். எனக்கு ஒருபெண்ணை அம்மா ஏற்கனவே நிச்சயம் செய்திட்டா. ஐந்து வருடம் கழித்தே திருமணம் என்று தட்டிக் கழித்து விட்டார்'

'உண்மையா அப்படி அவருக்கு . ...' ஆவலுடன் கேட்டாள் சுகன்யா.

'நீ ஏன் அவசரப்படுகின்றாய்?' என்று அர்த்த புஷ்டியுடன் சிரித்தான் செந்தில்.

'காரணத்துடன் தாண்டா கேட்கிறேன்.'

'யாருக்கும் இப்ப எதுவும் சொல்லக் கூடாது என்று என்னிடம் கூறினார். ஆகவே சொல்ல மாட்டேன்.' என்று கூறிவிட்டுஎழுந்து போனான் செந்தில்.

சுகன்யா சிந்தனையிலாழ்ந்தாள். ரம்யாவுக்குதிக் குத்தெரியாதகாட்டில் நின்று தவிப்பது போன்ற உணர்வு இருவரும் சில நிமிடநேரம் எதுவுமே பேசாமல் மௌனமாயிருந்தனர்.

அக்கா அவரை விரும்புகின்றாள். அதற்கிடையில் வேறு ஒருத்தனுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது. அண்ணி கூறியது உண்மையானால் அவர் என்னை ...... சுகன்யாவின் மனம் வால் அறுந்த பட்டம் போல் நிலையின்றிச் சுழன்று கொண்டிருந்தது. உண்மையை எப்படி அறிவது?

செம்தில் எதையோ மறைக்கின்றான். எனக்காகத் தான் அவர் ஸ்கூல் மாறி வந்தார். தன் சபதத்தை நிறைவேற்றினார் என்றால் அது ஆத்திரத்தில் ஏற்பட்ட விளைவல்ல .. என்னை விரும்பியதால் ஏற்பட்ட... அவள் மனதில் பல்வேறு நினைவுகள் அலைமோதி சுழன்றன. என்னை அவர் விரும்பும் பட்சத்தில் அக்கா ...... ...... .. ?கடவுளே இது என்ன சோதனை?.........அவளால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

ராஜசேகர் அவள் மனக்கண்முன் நின்று கம்பீரமாகச் சிரித்தான். அவனுடைய செயற்பாடுகளில் அவன் காட்டும் தீவிரம் சொன்னது போல செய்து காட்டும் தன்மை அப்படியிருக்குமோ? .........விடை காண முடியாத கேள்விக்குறி அவள் முன் விசுவருபமெடுத்து நின்று படம் விரித்தாடும் நாகம் போல் பயமுறுத்தியது. ரம்யாவைப் பார்த்தாள் அவள் தன்னையே உற்று நோக்குவதை உணர்ந்ததும் சுயநினைவடைந்தவளாய்

'அக்கா' என்றாள்

'என்னடி கனவு காண்கிறியா?' என்று ரம்யா சிரித்ததும் அவளுக்கு அவமானமாயிருந்தது.

'அக்கா நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள். நான் அவ்வளவு பேராசைக்காரியில்லை.'

அப்படியானால் நான்' ..

'உன்னை அப்படிச் சொல்லவில்லை. உன்னைப் போல நானும் மனக்கோட்டைகட்ட நினைக்கவில்லை என்று தான் கூற வந்தேன்'

'அண்ணி கூறியதையும், அவர் கூறியதையும் சேர்த்துக் கூட்டும் போது ...சுகன்யா நீ அதிஸ்டசாலியடி. எனக்கில்லையானாலும் உனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும்!!

'அக்கா முட்டாள் தனமாய் உளறாதே' என்று சீறிவிட்டு எழுந்தாள் எனினும் அவளுடைய இதயத்தின் ஓர் மூலையில் எங்கேயோ ஓர் இடத்தில் ஓர் ஏக்கத்தை உருவாக்கிவிட்டிருந்தது.

தனிமையில் இருக்ரும் பொழுது அவள் நினைவுகள் அவளை எங்கோ அழைத்துச் சென்றன. அவைசில சமயம் சொந்திலால் உருவாக்கப்பட்ட கற்பனைகளாய் இருக்கலாம் என நினைக்கும்போது அவள் ஒரு சூனியப் பெருவெளியில் தனித்து நின்றாள் அந்த வேளையில் அக்கா ரம்யாவின் முகம் அவள்சிந்தனையைக் குடைய ஆரம்பித்தது. தன் நினைவுகள், கற்பனைகள் யாவும் அக்காவுக்குச் செய்யும் துரோகமோ என நினைத்தபோது மனம் தளர்ந்து தள்ளாடியது.

நட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ரம்யாவின்கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன மாப்பிள்ளை வீட்டார் பெண்பார்க்கும் படலம் முடிவடைந்திருந்தது. தன்னைக் கேலி செய்யும் சுகன்யாவின் போக்கில் தெரிந்த மாறுதல்களை ரம்யா கவனிக்கவே செய்தாள்.

அன்று காலை மெயில் வண்டியில் ராஜசேகர் வந்திருந்தான். அவன் வந்த செய்தியை முதலில் ரம்யாவிடம் கூறியது சுகன்யாதான். ஒரு நாளுமில்லாத மகிழ்ச்சி அவள் முகத்தில் தவழ்ந்ததை ரம்யா உணர்ந்தாளாயினும் எதுவும் கூறவில்லை

பிரயாணக் களைப்புத் தீர நன்கு குளித்துக்கொண்டு நின்றான் ராஜசேகர். பள்ளத்துள் வாளி வைத்த சப்தம் கேட்டு ரம்யாவோ என நினைத்துத் திரும்பியவன், சிரித்துக்கொண்டு நிற்கும் சுகன்யாவைப் பார்த்ததும் புன்முறுவல் பூத்தவனாய் ''தண்ணீர் வேண்டுமா?என்று கேட்டான்.

'நான் குளிக்கப் போறன் நீங்கள் குளியுங்கள். இன்டர்வியூ எப்படி சார்?' என்றாள்.

''நன்றாக நடந்தது. அநேகமாகக் கிடைக்கலாம்'

'நிச்சயமாக ரீச்சிங்கை விட்டுவிடப் போறீங்களா?'

'ஏன்?' என்று வியப்புடன் திரும்பியவன் அவள் தலை குனிந்து நின்றதைப் பார்த்து முறுவலித்தான்.

'மிஸ் சுகன்யா, என்னவோ அன்று நீர் கூறிய விடயம் என்னை'இன்சஸ்ற்' பண்ணிய மாதிரியிருந்தது. அதனால் தான் நான் மாற்றம்பெற்று இங்கே வந்தனான். இப்ப எனக்கு'எக்ஸாமினேசன் பிரான்ஸில் நல்ல பதவி ஒன்று கிடைக்கப் போகுது. நான் பதவி பெறுவதுடன் மாறிப் போவதால் உமக்கு மனச் சந்தோஷமாயிருக்கும் என நினைத்தேன். இப்ப நாங்கள் சொந்தக்காரராயிட்டம் இனியும் .....' என்று கூறியவன் வாளியை அவளிடம் நீட்டினான்.

அவன் கையையும் சேர்த்துப் பற்றினாள் சுகன்யா. ஒருகணம் அதிர்ச்சிக்குள்ளான சேகர் தன்னுணர்வடைந்தவனாய் மெல்ல விலகிக் கொண்டான்,

'சார்'

'சொல்லும்'

'நான் உங்களோடு ஒரு விடயம்கதைக்கணும் ஆனால் பயமாயிருக்கு .... '

உமக்குப் பயமா? அதுவும் என்னிடம்........, வாய்விட்டுச் சிரித்து விட்டான். பின்னர் சமாளித்துக் கொண்டே 'சொல்லும் பயம் வேண்டாம் 'என்றான்.

'அக்காவின் கல்யாண விடயமாய் .. ...'மேலே பேச முடியாது தவித்தாள்.

'மிஸ் சுகன்யா சாப்பிட்ட பின்பு ஆறுதலாய் வீட்டுக்கு வாங்க கதைக்கலாம்' என்று கூறிவிட்டு சோப்புப் பெட்டியை எடுக்க முனைந்த போது அவளே எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

'தாங் யூ மிஸ் சுகன்யா' என்று கூறியவாறு நடந்தான் ராஜசேகர்.

அவர் பேச்சு செயல் அத்தனையும் அவள் மனதை கொக்கி போட்டு இழுத்துச் செல்வது போன்றிருந்தது.

அக்கா கல்யாணம் நிச்சயமாகி விட்டது. இனி அவனிடம் அதுபற்றிக் கேட்பதில் எதுவித பிரயோசனமுமில்லை என நினைத்தாளாயினும் அக்காவிடயம் பற்றிக் கேட்டால் சில சமயம் அவன் மனதைத்திறந்து உண்மையைக் கூறலாமல்லவா என நினைத்தபோது ...... அவனோடு வாழப்போகும் அந்த இன்பநினைவில் மிதந்தாள். உடம்பில் ஊற்றிய குளிர்ந்த நீர்கூட சுடு நீராகக் கொதித்துக் கொண்டிருந்தது.

அன்று மாலை வயித்திலிங்கத்தின் தங்கை மீனாட்சி வந்தவேளை அவளுக்குப் பிடித்தமில்லையாயினும் செய்வதறியாது தடுமாறி நின்றிருந்தாள்.

'அண்ணை எங்கே சுகன்யா?'

'வாசிகசாலைக்குப் பேப்பர் பார்க்கப் போயிருக்கணும் வாற நேரம்தான்' என்றாள் சுகன்யா?'

ரம்யா தேநீர் கொண்டு வந்து வைத்துவிட்டு 'மாமி ஏது இந்தப்பக்கம்' என்றாள்

'ஏன் வரக் கூடாதே'

'யார் வரவேண்டாம் என்றது. நீங்கள் தான் வாறதில்லை. இப்ப எல்லோரும் பணக்காறர்களைப் பார்த்துத்தான் கொண்டாடுகினம். உறவு முறையை யார் பார்க்கினம்' என்று சிரித்துச் சிரித்து ரம்யா கூறியதும் மாமி மீனாட்சியால் எதுவும் பேச முடியவில்லை.

'ரம்யா நீ சொல்லுறதும் சரிதான்டி. நான் என்றைக்கும் அப்படி நினைக்கிறதில்லை. எனக்கு வீட்டிலை எத்தனைவேலை. வெளிக்கிட நேரமில்லை.' என்று மாமி கூறிச் சமாளித்துக் கொண்டிருக்கையில் வயித்திலிங்கம் வந்தார்.

'யார் மீனாட்சியே, ஏனணை இன்றைக்கு காத்து இந்தப்பக்கமாய் வீசியிருக்கு' என்றார்.

'உங்களைப்போலவே இவளவையும் கேட்கிறாளவை. எனக்கு எங்கேயண்ணை நேரம்'

'அதுசரி நான் ஊர்விட்டு ஊர் போகாமல் ஒன்றுக்கையொன்று முடிச்சிடலாம் என்றுதான் நினைச்சன். தெய்வாதீனமாய் நல்ல இடமாய் பொருந்திப் போச்சு. உன்ரை மேன் இப்படியே இருக்கப் போறானே. என்ன சொல்லுறான் 'என்று வயித்திலிங்கம் கூறும் பொழுதே ரம்யாவும், தங்கையும் விலகிச் சென்று மறைந்து நின்று கொண்டனர்.

(வளரும்)

## ஆழ்ந்த தியானம்

சிறீ சுவாமி சிவானந்தா

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மன அமைதியுடன் இரு, விடாமுயற்சிரால் இந் நற்குணத்தைப் பயின்று கொள். அமைதி ஒரு பாறை போன்றது. கோப விருத்திகள் என்னும் அலைகள் அதன் மேல் மோதலாம். ஆனால், அந்த அலைகளால் அப்பாறையைத் தகர்க்கமுடியாது.

மாறுபாடற்றதும், சலனமற்றதும் எப்பொழுதும் அமைதியுடன் இருப்பதுமான ஆத்மாவைக் குறித்துத் தியானி. நீ மனஅமைதி பெறுவாய். தெய்வீக ஒளி, அமைதி கொண்ட உள்ளத்திற்தான் குடிகொள்ளும். அமைதி பெற்ற சாதகனால் தான் ஆழ்ந்த தியானம் செய்து நிர்விகல்ப சமாதியை அடைய முடியும்.

உண்மையாக இரு. நிலையற்ற சிறு வஸ்துக்களுக்காகக் கவலைப்படாதே. நித்தியமான உண்மைப் பொருளையே நினை. உபயோகமற்ற,ஆடம்பரமான, அர்த்தமற்ற பெரிய பேச்சுக்களை விட்டுவிடு.கண்டபடி எல்லாம்

12ம் பக்கம் பார்க்க

# 4

# தமிழ் மரபில் இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகள்

★ கலாநிதி நா. சுப்பிரமணியன்

தொல்காப்பியத்திலே இக்லகியத்தின் உள்ளடக்கம் அகம், புறம் என்ற இருபெரும். பிரிவில் சுட்டப்பட்டுள்ளது பொருளதிகாரத்தில் முதல் ஐந்து இயல்களும் இந்த உள்ளடக்கங்கள் பற்றியும் இவற்றை இலக்கியஆக்கத்தில் அமைத்து வெளிப்படுத்தும் முயற்சிபற்றியும் பேசுவன என்பது முன்னரே நோக்கப்பட்டது. அகம் என்பது ஆண் பெண் உறவுசார்ந்த உணர்வு நிலைகளையும் புறம் என்பது சமூக பொருளியல் உறவு நிலைகளுடன் தொடர்புடைய வீரம், கொடை, ஆட்சிச்சிறப்பு முதலியன சார்ந்த உணர்வு நிலைகளையும் குறித்துப் பயில்வன. புறத்தில் சமயம், அறம் சார்ந்த பொருண்மைகளும் அமையும் தொல்காப்பியத்தில் புலப்படுகின்றது'

இலக்கியத்துக்கான பொருண்மை பற்றிப் பேசும் பொழுது தொல்காப்பியம் 'புலநெறி வழக்கம்'எனஒன்றைக் குறிப்பிடும்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்
சான்றபுலனெறி வழக்கம்
.................... ...........

என்று அது குறிப்பிடப்படும்.(பொருள்; அகம்: நூற்பா 56) இந்நூற்பாவுக்கு உரை கொள்வதில் கருத்து முரண்பாடுகள் உள.எனினும் இதன் தெளிபொருளாக ஒரு கருத்தை நாம் கொள்ளலாம். நாடகவழக்கென்பது புனைந்து கூறுதல். உலகியல் வழக்கென்பது வாழ்வில் உள்ளதை உரைத்தல். இந்த இரண்டின் இணைப்பால் அமையும் புலனெறிவழக்காவது பின்வரும் இருநிலைகளில் அமையலாம்.

(அ) உண்மைக்கதைமாந்தர் மீது அவர் மாட்டு இல்லாதவற்றையும்புனைந்துரைத்தல்.
(ஆ) கற்பனை மாந்தர் மீது உலகியல் நிகழ்வுகளைப்புனைதல்புறம்,அகம்என்பனசார்ந்த பாடற் பொருண்மைகள் இவ்விரு நிலைப் புலனெறி வழக்கில் அமைவன எனக் கொள்ளலாம்.

இவை இலக்கியமாக உருப்பெறும் நிலையில் புலப்படுத்த வேண்டிய உணர்ச்சிகள் அமையும் நிலை பற்றிய இலக்கணமாகவே மெய்ப்பாட்டியல் அமைகிறது எனலாம். நகை, அழுகை முதலிய எட்டுமெய்ப்பாடுகளின் அடிப்படையில் முப்பத்திரண்டு உணர்ச்சி அநுபவங்களைத் தொல்காப்பியம் விரித்துரைக்கிறது. இவற்றுக்குப் புறம்பான முப்பத்திரண்டு உணர்ச்சியநுபவங்களும் அதிற்பேசப்படுகின்றன. இந்த மெய்ப்பாட்டியற் பொருண்மையை வடமொழியின் ரஸக் கோட்பாட்டோடு இணைத்துச் சிந்திக்கும் வழக்கம் உளது. எனினும் இவற்றைஒப்பிட்டுஇன்றுவரை விரிவான ஆய்வுகள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இலக்கிய ஆக்க முயற்சியில் கற்பனையின் பங்கை உணர்த்தும் வகையில் தொல்காப்பியத்தின்உவமையியல்அமைகிறது. உவமையை இலக்கியத்தின் அணிவகைகளுள் ஒன்றாகக் கொள்வது பொதுமரபு.இளம்பூரணர் உவமை தொடர்பாகத் தரும்விளக்கம் அதனை ஒரு அணி என்றே கருதவைக்கிறது. முன்னர் அறியாத பொருளை அறிய உதவுதல், கேட்டோர்க்கு இன்பம் தரல் ஆகிய பயன்பாடுகளை உடையதாக உவமையை அவர் கருதுகிறார். பேராசிரியர் கருத்துப்படி உவமை ஒரு அணி அல்ல. அது கவிதைப் பொருளை விளக்கப் பயன்படும் ஒரு அம்சம் என்ற அளவிலேயே அது அமைகிறது. ''உவமத்தாலும் பொருட் புலப்பாடே கூறப்படுகிறது'' என்பர் அவர். இம் முரண்பாடு சுவாரஸ்யமான ஒரு விவாதத்திற்கு இடமளிக்க வல்லது.

கலை இலக்கிய ஆக்கத்திறன்களில் முக்கியமான ஒன்று பொருளை அல்லது உணர்வு நிலையைக்குறிப்பால்உணர்த்தும் ஆற்றலாகும் இவ்வாறு குறிப்பால் உணர்த்தும்முறைமைகளைத் தொல்காப்பியம் உள்ளுறையுவமம், இறைச்சி என இருவகையிற்சுட்டுகின்றது. இவை முறையே அகத்திணையியலிலும் பொருளியலிலும்.

எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றால் சுட்டப்படும் குறிப்புப் பொருண்மை வடமொழியிலே'தொனி' என்பதற்கு நிகராகக் கொள்ளப்படுவது 'தொனி'யே இலக்கியத்தின் உண்மையான அழகு என்றும் அதுவே உயிரான அம்சம் என்றும் கருதப்படுவதுண்டு. வடமொழியிலே தொனிக்கோட்பாட்டை முதவில் முன்வைத்தவர். கி. பி. 9ம் நூற்றாண்டினரான ஆனந்தவர்த்தனர் ஆவர். இவரது தொல்யாலோகம் நூலிலே முதலில் இக்கோட்பாட்டை விளக்குகிறது. இற்நூல் எழுவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தொல்காப்பியம் உள்ளுறை இறைச்சி என்பன தொடர்பாகச் சிந்தித்துள்ளமை அனைத்திந்திய இலக்கிய பாரம்பரியத்திலே தமிழிலக்கிய சிந்தனைக்குப் பெருமை தரக்கூடிய ஒரு அம்சமாகும்,

தொல்காப்பியத்தின் செய்யுளில் இலக்கியக் கட்டமைப்புத் தொடர்பான இலக்கணமாகும்- ஓசைகள், அவற்றால் அமைந்த பாவகை, பா அல்லாத யாப்புவகைகள், இவற்றிற் பொருள் அமையும் முறைமை, இலக்கிய வகைகள் என்றின்னோரன்ன பல விடயங்களையும் இது விரித்துரைக்கிறது.

இவவாறு இலக்கிய ஆக்கம் தொடர்பாகத் தனது காலத்திலும் அதன் முன்னரும் நிலவிவந்துள்ள கருத்துக்களைத் தொடுத்தும், வகுத்தும் விதிமுறையிலக்கணம் வகுத்தமைத்த தொல்காப்பியம் அடுத்து மரபியலின் இவதி நூற்பாக்களில் நூல் மரபுபற்றிப் பேசுகிறது. இவ்வாறு பேசப்பட்ட மரபுபற்றிய சில விடயங்கள் பின்வரக்கூடிய நூலாசிரியர்க்கும், செயன்முறைத் திறனாய்வை மேற்கொள்வோர்க்கும் மேலாணைபோல் அமையக் காணலாம்.

## தொல்காப்பியத்தின் நூல் மரபு

நூல்மரபு பற்றிய பகுதியில் முதலிலே மரபின் முதன்மை இன்றியமையாமை என்பன சுட்டப்படுகின்றன,

''மரபுநிலை திரிதல் செய்
யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி
னான''
''மரபுநிலை திரியிற் பிறிவ
பிறிதாகும்''
''வழக்கெனப் படுவ துயர்ந்
தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக
லான்''
(மரபியல் நூ:92- 94)

இந்நூற்பாக்களின் பொருள் வெளிப்படை முதல் நூற்பாவில் செய்யுள் மரபு திரிதலாகாது என்ற ஆணை தொனிக்கிறது. மரபு திரிந்தால் பொருள் வேறுபடும் என்பதை அடுத்த நூற்பா உணர்த்தும். உயர்ந்தோர் பேணிக்கொள்ளும் அல்லது செயற்படும் நிகழ்ச்சிகளினடியாகவே வழக்கு அமைகிறது என்பது மூன்றாவது நூற்பாவின் தெளிபொருள். இந்த உயர்ந்தோர் வழக்கத்தினைத் தழுவிச் செல்லும் நெறியே மரபு எனக் கருதப்பட்டமை உய்ந்துணரப்படுகிறது.

இவ்வாறு மரபின் முதன்மை சுட்டிய தொல்காப்பியம் அடுத்து மரபுநிலை திரியாமாட்சியுடையவாகிய நூல்கள் முதலில், வழிநூல் என இருவகைப்படும் என்கிறது. இங்கே நூல் என்பதனால் தொல்காப்பியம் எவ்வகை மொழியாக்கத்தைச் சுட்டியது என்பது சிந்திக்கப்படவேண்டியதொன்றாகும், தொல்காப்பியச் செய்யுளியலில் நூல் என்பது பாட்டு என்ற அமைப்பு நிலையினின்று வேறுபட்டதாகச் சுட்டப்பட்டுள்ளது. பாட்டு என்பது அடிவரையறையுடைய ஆக்கம் என்பதும் நூல், உரை முதலிய ஏனைய செய்யுள் வகைகள் அடிவரையறையற்றன என்பதும் அவ்வியல் தரும் செய்தியாகும்.

(நூற்பா 157- 158) இவற்றுள் நூல் பற்றிய விளக்கம் பின்வருமாறு:

அவற்றுள்,
''நூலெனப்படுவது நுவ
லுங்காலை
முதலும்,முடிவும் மாறுகோ
ளின்றி
தொகையினும்,வகையினும்
பொருண்மை சுட்டி
உண்ணின் றகன்ற வுரை
யொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கலது
வதன்பண்பே'' (நூ: 159)

இந்நூற்பாவுக்குப் பேராசிரியர்,

'' நூலென்று சொல்லப்பட்டவற்று முன்னும் பின்னும் மாறுபடாது தொகுத்தும் வகுத்தும் பொருள் காட்டி அடங்கானின்ற பொருள் விரித்துச் சொலப் பட்டுபருப் பொருட்டாகாது நுண்பொருட்டாகப் பொருள் விளக்கல் அதற் கிலக்கணம் அது என்றவாறு''

எனப் பொருள் கூறுவர்.

கூற எடுத்துக் கொண்ட பொருளை வாசகன் உளங்கொள்ளுமாறு முரணற்ற வகையில் நுட்பமாகத் தொகுத்தும் வகுத்தும் விளக்கும் முறைமையே நூல் என்பதால் சுட்டப் பட்டமையை மேற்படி நூற்பாவும் அதன் பேராசிரியருரையும் தெளிவுபடுத்துவன பாட்டு என்ற இலக்கிய வகைக்கும் நூலுக்கும் உள்ள முக்கிய வேறுபாட்டை இளம்பூரணர் பின்வரும் உரைப் பகுதியால் விளக்குவர்.

''பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை த.ழீஇயவற்றைப் பாட்டு என்றார் ஓசையின்றிச் செய்யுள் தன்மைத்தாய் வருவது நூலெனப் பட்டது.'

என்பது அவ்விளக்கம். இதன் படி பாட்டு என்பது ஓசையுடையதால் அமைவது என்றும் நூல் பாவுக்குரிய ஓசையின்றி அமைவது என கருதப்பட்ட நிலை தெரிகிறது. தொல்காப்பியம் மரபியலிலும் நூலுக்கு இலக்கணம் கூறுகிறது. இதிலே நூலில் அமையவேண்டிய உரைவகை, தவிர்க்கப் படவேண்டிய பத்துக் குற்றங்கள், பொருள் உணர்த்து முறைக்குரியனவாகிய முப்பத்திரண்டுவகை உத்திகள் என்பன மேலதிகமாகக் கூறப்பட்டுள்ளன.

மேலே செய்யுளியல். மரபியல் என்பவற்றில் நூல் தொடர்பாகக் கூறப்பட்டவற்றைப் பொதுவாக நோக்கும்போது அது பாட்டு என்ற வடிவ நிலையினின்று வேறுபட்ட அமைப்பென்பதும் அறிவு பூர்வமாகத் திட்டமிட்டு அமைக்கப்படும் ஆக்கத்தைக் குறிப்பதாகவும் கருதவேண்டியுள்ளது. ஆய்வாளர் பலரும் தொல்காப்பியம் குறிப்பிடும் நூல் பற்றிச் சிந்தித்துள்ளனர்.

'Tolkappiyar onMutal Nul' என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்திய திரு. அ, அ. மணவாளன் என்பார், நூல் என்ற சொல் தொல்காப்பியத்திலே நூல் என்றசொல் பன்னிரண்டு இடங்களிற் பயின்றுள்ளது என்றும் அவற்றுள் ஐந்து இடங்களில் இலக்கணத்தையும் ஒரு இடத்தில் அந்தணர் அணியும் நூலையும் ஏனைய ஆறு இடங்களில் பொதுவாகச் செய்யுளையும் சுட்டிப் பயின்றதாகக் கூறுவர். மேலும் அவர், சங்க இலக்சியங்களில் நூல் என்ற சொல் நாற்பத்து மூன்றுஇடங்களிற் பயின்றுளதெனவும் அவற்றுள் மூன்று இடங்களில் மட்டுமே இலக்கியம் என்ற பொருண்மையை அச்சொல் புலப்படுத்தியுள்ளதென்றும் கூறியுள்ளார். திரு. ஆ. சிவலிங்கனார் என்பார். தொல்காப்பியத்தில் அமையும் நூல் பற்றிய குறிப்புக்களை நுண்ணாய்வு செய்து, 'தொல்காப்பியக் காலத்திலும் அதற்கு முன்னைய காலத்திலும் இலக்கண நூலைக் குறிக்கவே நூல் என்றசொல் வழங்கி வந்திருக்கவேண்டும் என்ற ஊகத்தை முன்வைப்பர். (டாக்டர் கே. பசுபதி தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் மரபியல் V XXXVIII) டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள்,

'நூல் என்பது இலக்கண நூற்களைக் குறிக்கவே முன்பு பயன்பட்டது எனத் தெரிகின்றது. மொழியின் இலக்கணம் மட்டுமன்றி எல்லா இலக்கணங்களும் (TreaLises) இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கலாம்.' என்கிறார். (இலக்கணத் தொகை - யாப்பு - பாட்டியல் ப. 57) டாக்டர் இராம. பெரியகருப்பன் என்பார்,

நூல் என்பது தொல்காப்பியர் காலத்தில் இலக்கணத்தைக் குறித்தது என்கிறார். (வையை- 7. ப 118)

இவ்வாறான கருத்துக்களை நோக்கும்போது தொல்காப்பியம் நூல் என்பதால் இலக்கண நூல்களையே முக்கியமாகச் சுட்டியதென்று கருதவேண்டியுளது. ச.வே. சுப்பிரமணியன் கூறுவது போல மொழியிலக்கணம் என்ற அளவில் மட்டுமன்றி எல்லாவகை இலக்கணங்கட்கும் அது பொதுச்சுட்டாயமைந்ததென்றே கொள்ளலாம்.

இவ்வாறு கொள்ளும்போது மரபியலில் நூற்குற்றங்கள் தொடர்பாக அமையும் ஒரு குறிப்பு ஒரு பிரச்சினையைக் கிழப்புகிறது, நூற்குற்றங்கள் பத்துள் ஒன்றாக,

'கேட்போர்க்கின்னாயாப்பிம்றாதல்' என்பது கூறப்பட்டுள்ளது. இதற்கு இளம்பூரணர்,

'பொருள் யாக்கப்பட்ட
சூத்திரம் சந்தவின்பமின்றி
யிடுதல்'

என உரை கூறுவர். யாப்பினிமை (ஓசை-சந்த-இன்பம்) என்பது இலக்கிய ஆக்கத்தில்: பாட்டிலக்கியத்தில்-எதிர்பார்க்கப்படவேண்டிய சிறப்பியல்புகளிலொன்று. இது இலக்கணம் என்ற அறிவுசார் ஆக்கத்துக்கும் எதிர்பார்க்கப்பட்டதா என்பதே அப் பிரச்சினை. தொல்காப்பியத்தைப் பின்பற்றிய இலக்கண நூலாகும் ஓசையினிமையை நூலாக்க அம்சங்களிலொன்றாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக நன்நூலார் நூலின் பத்து அழகுபற்றிக் குறிபிடுமிடத்து 'ஓசையுடமை' என்பதையும் உள்ளடக்கியுள்ளார். (நன்நூல் நூற்பா:13) இது மேலும் சிந்திக்கவேண்டியதொன்றாகும். எனினும் பொதுவாக நூல் என்பதை இலக்கண ஆக்கமாகக் கருதிக் கொள்தவது தவறாகாது எனலாம்.

இவ்வாறு நோக்கும்போது தொல்காப்பியம் முதநூல் வழிநூல், என்பவற்றுக்குக் கூறப்பட்ட விளக்கங்களை இலக்கிய ஆக்கம் தொடர்பனவையாக வலிந்துகொண்டு மயங்க வேண்டியதில்லை. ஆயினும் இலகியத் திறனாய்வுச் சிந்தனைஎன்றவகையில்நோக்கும்போது தொல்காப்பியம் கூறும் நூற்குற்றம், உத்தி வகைகள்பாயிரம் என்பனவும்அவை பிற்கால இலக்கணங்களில் எய்திய பொருட்பரிணாமங்களும் தனிக்கவனத்தைப் பெறவேண்டியன என்பது ஈண்டு குறுப்பிடப்படவேண்டியதொன்றாகும்.

மேலும், நூல்மரபு பற்றிய பகுதியில் முதலிற் கூறப்பட்ட மரபின் முதன்மை, இன்றியமையாமை தொடர்பான நூற்பாக்கள் எல்லாவகைச் செய்யுட்குமுரிய பொதுவிலக்கணமாகவே கொளற்பாலன 'மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை' என செய்யுள் என்ற சொல்லே அங்கு பயிலக்காணலாம். அன்றியும் செய்யுளியலிலும் மரபு ஒரு செய்யுளுறுப்பாகச் சுட்டப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

'மரபே தானும்
நாற் சொவிலினான் யாப்பு
வழிப்பட்டன்று'

12ம் பக்கம் பார்க்க

## நாடகப்போட்டியில் இளவாலை மெய்கண்டானின் ‘காத்தவராயன்’

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் கிராமப் புறத்துப் பாடசாலை, நிதி நிலையில் பின்தங்கிய. வசதிகள் குறைந்த நிறுவனம், சுற்றுவட்டார மாணவர்கள் மட்டும் கல்வி கற்கும் வித்தியாலயம் அண்மையில் கல்விப்பகுதி நடாத்திய தமிழ் நாடகப் போட்டியில், பெரிய கல்லூரிகளுடன் போட்டியிட்டு, இரண்டாம் இடத்தைப் பெற்றமையைக் கலையுலகு களிபேருவகையுடன் வரவேற்கிறது,

அம்பனைக் கொத்தணிப் போட்டியிலும், பண்டத்தரிப்பு கோட்டப் போட்டியிலும் முதலாவது இடம் பெற்ற இப்பாடசாலையின் ‘காத்தவராயன்’,இறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அடுத்து இரண்டாம் இடத்தைப் பெற்றதைக் காத்திரமான சாதனை எனலாம். வேம்படி மகளிர் கல்லூரி ஒரு தேசிய உயர்தர கல்லூரி, நிதிபடைத்த நிறுவனம்! பல பிரதேசத்து வசதிபடைத்த மாணவிகள் கல்விபயிலும் கூடம். சகல வசதிகளும் தாராளம். ஏராளம் உள்ள ஒரு பழம் பெருமையுடைய ஸ்தாபனம். இவர்கள் தயாரிப்பில் பல்கலைக்கழகத்து வல்லுநரின் மறைமுக உதவிகளும் இருந்ததாக வதந்தி. ஆனால் எத்தனையோ இடர்கள் மத்தியில் போட்டியிட்டு இரண்டாம் ஸ்தானத்தை தனதாக்கிய மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை எவ்வளவும் போற்றலாம். முக்கியமாகக் கலையுள்ளம் கொண்ட அதிபர் சைவப்புலவர் செல்லத்துரையை அவருடன் நூற்றுக்கு நூறு வீத ஒத்தாசை புரியும் ஆசிரிய குழுவைப் பாராட்டவேண்டும். ஆசிரியர் குழு ‘முணுமுணுக்காது’ ,‘புறுபுறுக்காது’ அதிபருக்குத் துணைபுரியும் கல்விக்கூடத்திற் கலைத்துறையில் ஆயிரம் சாதிக்கலாம். இந்த நிலை மெய்கண்டானில் மேம்பட்டு நிற்கிறது. கலைச்சாதனைகளும் தொடர்கிறது.




### மதிநுட்பத்துடன் சுருக்கமாய் அமைக்கப்பட்ட பிரதி

இருபது நிமிடங்களுக்குள் நிகழ்வதாகப் பல சம்பவங்களை இறுக்கமாகச், சுருக்கமாக அமைத்துவிட்டார்கள். பிரதியில் மாரியம்மன் வருகை, ஆண் மகவு வேண்டித் தவம்புரியச் செல்லுதல். காத்தான் தோற்றுதல், சின்னானுடன் தோழமை பூணுதல், வேட்டைக்குச் செல்லுதல் என்ற சம்பவங்கள் ஆறு நிமிடங்களுக்குள் அமைத்தமை சலிப்பற்று நயக்க உதவியது முப்பது நிமிடங்களுக்கு நடிக்கத்தக்கதை சுவை பாடாது சுருக்கி நடித்த ஆற்றலை விதந்தோம், கழுவேறும்பரீட்சையைமட்டும் நடித்தார்கள். அவ்விடத்தில் அழுத்தியிருக்க வேண்டும். முடிவும் மொட்டையாக முடிந்து விட்டது. மாணவர் நோக்கில் பார்க்கிற போது ‘‘கொஞ்சி கொஞ்சி, அம்மாநான் விளையாட அம்மாவே விளையாட, எனக்கொரு கொஞ்சும் கிளி அம்மாவிடம், கேட்டு வந்தேன்’’ என்ற பகுதி காத்தான் பாடலில் வருவது அநாகரிகமாகப் படுகிறது.

### பாடசாலைகளில் இல்ல நாடகப் போட்டிகள்

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி ஒரு காலத்தில் இல்ல நாடகப் போட்டிகளை நடாத்தி நடிப்பாற்றல் உள்ள மாணவர்களை இனங்கண்டது. பின் கலைக் கழகம் நடாத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் நாடகப் போட்டிக்கு தாம் தேர்ந்தெடுத்த மாணவர்களுள் திறமை மிக்கவர்களை நடிக்க வைத்து, தொடர்ந்து வெற்றியீட்டியது. தொடர்ந்து ஐந்து வருடங்கள் முதலாம் இடத்தை நாடகப் போட்டியில் மகாஜனா பெற்றது. தரத்தில் விஞ்சியும் நின்றது. இன்று இப்படியான இல்ல நாடகப் போட்டிகள் நடாத்தப்படுகின்றனவா?

1967 -ல் கலைக்கழகம் நடாத்தியபாடசாலை நாடகப் போட்டியில் தரமான நாடகங்கள் என ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்கள், வேம்படி மகளிர் கல்லூரி, மகாஜனாக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, வேலாயுதபிள்ளை மகாவித்தியாலயம் என்பவற்றின் ஆக்கங்களாகும். மட்டக்களப்பில் நிகழ்ந்த இறுதிப் போட்டியில் கலந்துகொள்ள ஐந்து கல்லூரிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட நடிக மாணவர்களும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட துணைநின்ற மாணவர்கள் ஆசிரியர்களும் சென்றனர். நாடகத்துறையை வளர்த்திட அக்காலத்தில் நல்ல வாய்ப்புகள் இருந்தன; பயன்படுத்தப்பட்டன. இந்நிலை மீண்டும் மலர்ந்தெழ வேண்டும். கல்லூரிகள் இருநேர பாடசாலைகளாக இயங்க ஆரம்பிக்கும் இவ்வேளை சமூக நோக்குள்ள கலைவளர்க்கும் உள்ளமுள்ள இளம் ஆசிரியர்கள் கலைத்துறை மேம்பட களத்தில் குதித்தே ஆக வேண்டும்.

# ஒரு நாள் கிரிக்கட் பாகிஸ்தானின் சாதனை

கப்டன் D. A. M. குணசிங்கம்

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் எதிர் பாராத முடிவுகளுக்கும், திருப்பங்களிற்கும் பெயர் பெற்றவையாகும். இதற்கு கண்கண்ட எடுத்துக்காட்டாக விளங்குவது அண்மையில் சாஜாவில் நடந்து முடிந்ஆஸ்ரலேசியாக் கிண்ணத்திற்கான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியாகும்.

இந்த ‘சம்பியன் ஷிப்’ கிரிக்கெட் போட்டியில் இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து பங்களாதேஷ் ஆகிய ஆறு நாடுகள் இம்முறை போட்டியில் கலந்து கொண்டன. இவற்றுள் முதற் குறிப்பிட்ட ஐந்து நாடுகளும் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் புலிகள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இருந்தும் முன்னை நாள் சாஜா போட்டிச் சம்பியன்களான இந்திய அணி, அசாருதீன் தலைமையில் சிறப்பாக ஆடும். குறைந்த பட்சம், இறுதியாட்டம் வரையாவது வரும் என்று எல்லோரும் எதிர் பார்த்தனர். ஆனால் நடந்தது என்ன? முதற் போட்டியிலேயே இந்தியஅணி இலங்கையணியிடம் தோற்றது. பலம்பொருந்திய இந்திய அணிக்கு தண்ணி காட்டியஇலங்கையணிதொடர்ந்து நடந்த போட்டிகளில், பாக்கிஸ்தான் அணியிடமும்,அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா இடமும் எவரும் எதிர்பாராத விதத்தில் படுதோல்வியை தழுவிக் கொண்டது. அதே போல் முதலாவது அரையிறுதி யாட்டத்தில் நியூசிலாந்து அணி பாகிஸ்தானிடம் வெட்கித் தலைகுனியும் விதத்தில் தோற்றது. இப் போட்டியில் நியூசிலாந்துஅணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது என்பது இங்குகுறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இறுதியாட்டத்தில் ஆடப் பாகிஸ்தானும் அவுஸ்திரேலியாவும் தகுதி பெற்றதும் அவுஸ்திரேலியா இம்முறை ‘ஆஸ்ரலேசியாக்’ கப்பைத் தட்டிக் கொள்ளும் என்று பெரும்பாலான பத்திரிகைகள் ஆருடம் கூறின. ஆனால் நடந்தது என்ன? பாகிஸ்தான் அணியினர் வெற்றி பெற்று சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தம்மை மிஞ்சுவார் எவருமில்லையென்று நிரூபித்துள்ளார்கள்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் இம்ரான் கானின் அயராத உழைப்பே பாகிஸ்தான் அணியின் தொடர்ச்சியானவெற்றிகளுக்கு காரணம் என்று துணிந்து கூறலாம். 37 வயதான இம்ரான்கான் டெஸ்ட் பந்தயங்களில் 300 ற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியும் 3000ற்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றும் உலகில் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் மூன்றாம் இடத்தில் நிற்கின்றார். 1ம் 2ம் இடங்களை முறையே அயன் போத்தம், கபில்தேவும்பெற்றுள்ளனர்.

இம்முறை பெற்ற வெற்றியுடன் பாக்கிஸ்தான் அணி தொடர்ச்சியாக 4 வது முறையாக சாஜாவில் நடந்த போட்டிகளில் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துள்ளது. மேலும் 1986 ம் ஆண்டுஇலங்கையில் நடைபெற்ற ஒரு நாள் போட்டி, 1989 ம் ஆண்டு இந்தியாவில் இடம் பெற்ற ஜவகர் லால் நேரு கிண்ணப் போட்டி ஆகியவற்றிலும் பாகிஸ்தான் அணியே வெற்றி பெற்றமை இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டிய தொன்றாகும்.

மேற்கூறிய வெற்றிகள் எல்லாவற்றிற்கும் அணித் தலைவர் இம்ரான் கானிற்குப் பக்கபலமாய் இருந்தவர் இம்ரான் கானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆடிவரும்பசீர்அக்ரம் என்றுகூறுதல் பொருத்தமாகும். பசீர் அக்கம்நேரு வெற்றிக் கிண்ணப் போட்டியில் தனதுசாதுரியமானபந்துவீச்சினால் பலம் பொருந்திய மேற்கிந்தியத் தீவுக்கோஷ்டியின் துடுப்பாட்டத்தை வலுவிழக்கச் செய்தார். அதேபோல் ஆஸ்ரலேசியக் கிண்ண இறுதிப் போட்டியிலும் தனது அபார பந்து வீச்சினால்அவுஸ்ரேலிய அணியை கதிகலங்கச் செய்தார்.

பசீர் அக்ரமின் பந்து வீச்சுடன் அவரின் துடுப்பாட்டமும் நேரு கோப்பைப்பந்தயத்தில் துலாம்பரமாகியது. 7000 ரசிகர்கள்கண்டு களித்த,ஈடன் பூங்காவில் (கல்கத்தா) நடைபெற்ற நேரு கோப்பை இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணியின் தலைவர் வியன் ரிச் சேட் வீசிய பந்தை வெகு இலாவகமாக சிக்சருச்கு அடித்து நாலு விக்கற்றுகள் வித்தியாசத்தில்

12ம் பக்கம் பார்க்க

## நூல் விமர்சனம்

நூல்: கலை இலக்கியத் திறனாய்வு
ஆசிரியர்: கே. எஸ். சிவகுமாரன்
வெளியீடு: தமிழ் மன்றம்
கண்டி
இலங்கை
விலை: இலங்கையில் ரூபா 20 00
தமிழ் நாட்டில் ரூபா 10 00

திறனாய்வின் பொதுப்பண்புகள், அதனை அணுகும் முறைகள், செய்முறைத் திறனாய்வின் முக்கியத்துவம், திறனாய்விற் கலைநயம் பெறும் இடம் ஈழத்தில் திறனாய்வின் வரலாறு, ஈழத்தில் வெளியான விமர்சன நூல்கள், கவிதைத் திறனாய்வு செய்யும் வழிவகைகள், ஈழத்திலே தமிழ் நாடக விமர்சனத் துறையின் நிலை, திறனாய்வின் சமூகவியற் போக்கு எனப் பகுத்துக் கொண்டு ஒன்பது இயல்புகளில் சுருக்கமாக, உயர்தர வகுப்பு மாணவர்க்குச் சிறப்பாகவும், எழுத்தாளர், திறனாய்வாளருக்குப் பொதுவாகவும் பயன்தரத்தக்க வகையிலே ‘கலை இலக்கியத் திறனாய்வு’ என்ற இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஐம்பதுகளிலிருந்து, ஈழத்தில் வெளியான ஆக்க இலக்கியங்கள் பற்றியும் கலைத்துறை பற்றியும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வானொலி தொலைக்காட்சி ஆகிய வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் ஊடாகத் திறனாய்வு நிகழ்த்திவரும் கே. எஸ். சிவகுமாரன் இந்நூலின் ஆசிரியர். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் திறமையும் அவ்விருமொழிகளையும் லாவகமாகக் கையாண்டு எழுதும் ஆற்றலும், பரந்த நூலறிவும் கைவரப் பெற்ற இவர், தமது அவதானிப்புக்களை இந்நூல் வாயிலாக நன்முறையிலே வெளியிட்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

வ. வே.சு. ஐயர், சிதம்பர குருநாதன், பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்

சொக்கன்

தம்பி முதலான திறனாய்வாளர்களின் கருத்துக்களைப் பெரும்பாலும் அடியொற்றிச் சென்ற போதிலும், தமது கருத்துக்களையும்கே.எஸ் சிவகுமாரன் வலியுறுத்தப் பின் நிற்கவில்லை. தேவை ஏற்படுமபொழுதுஇம் ‘முன்னோர் மொழி பொருளை’ வெட்டித் தம் முடிவுகளை வலியுறுத்தவும் தவறவில்லை. திறனாய்வு என்பது பக்கம் சாராமையும், நடுவு நிலையும் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதில் ஆசிரியர் கொண்டுள்ள அழுத்த நம்பிக்கை பாராட்டப் படபடவேண்டியதே.

‘பாட்டாளி வர்க்க இலக்கியம் இருப்பதுபோல பூர்ஷுவாவர்க்க இலக்கியமும் இருக்கையில் பிரச்சினை எங்கு எழுகிறது......இதில் பிரச்சினைக்கே இடமில்லை.

12ம் பக்கம் பார்க்க

★ மீன்பாடும் தேன்நாடு தந்த

# பாலுமகேந்திராவின் அரிய சாதனைகள் தொடர்கின்றன

'மீன்பாடு தேன்நாடு' என்று புகழ்பெற்ற கிழக்கில் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலுமகேந்திரா இன்று தென்னகத் திரைப்படவுலகில் தனித்துவம்பெற்ற அற்புதக் கலைஞராக மிளிர்கிறார்.

அவரது 'வீடு' திரைப்படம் கடந்த வருடத்தின் மிகச் சிறந்த தமிழ்ப்படமாகவும் அதில் நடித்த அர்ச்சனா அவ்வருடத்தின் சிறந்த நடிகையாகவும் தெரிவுசெய்யபட்டு இந்தியாவின் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

இப்படத்தைத் தொடர்ந்து தொலைக்காட்சி நிலைய உதவியுடன் பாலுமகேந்திரா எடுத்துள்ள 'சந்தியாராகம்' எனும் படம் அகில இந்திய ரீதியில் மிகச்சிறந்த குடும்ப நலச் சித்திரமாக தெரிந்தெடுக்கப்பட்டு தேசிய விருதையும் தமிழுக்கு வாங்கிக்கொடுத்துள்ளது.

'சந்தியாராகம்' வயோதிபத்தின் கதை. உறவுகளின் நோக்கம் பற்றிய கதை.

அக்கிழவருக்கு வயது 84 கிராமத்து மனிதர் பிறந்தது முதல் வேறெங்கும் போய் அறியாதவர்.. தன்மானமுள்ளவர்...நல்லவர்.

வயோதிபத்தின் கட்டாயமான கையாலாகாத்தனம் ஆற்றாமை ... ஆதாரப்படவேண்டிய நிர்ப்பந்தம் போன்ற விஷயங்களின் வெளிப்பாடுதான் 'சந்தியாராகம்'

வயோதிபராக வயோதிபரான சொக்கலிங்க பாகவதரே நடித்துள்ளார்.

இன்றைய நடுத்தர வாழ்க்கையில் உறவுகளைத் தீர்மானிப்பது எது? அன்பா...... பொருளாதாரமா ... வயதின் மீதான பச்சாதாபமா... ஊராரின் விமர்சனத்துக்குப் பயந்த வறட்டுக் கௌரவமா? அல்லது உறவுகளினால் வரக்படிய சுயநலமா?

இப்படி நுணுக்கமாக ஆராயும் ஆழமான கதை இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஆடலும்-பாடலும் சண்டைகளுமான இன்றைய மசாலாப் படவுலகில் பாலு மகேந்திராவின் இம்முயற்சி ஒரு திருப்பு முனையாக விமர்சிக்கப் படுகிறது.

கடல் கடந்து நம்மவர் பரப்பும் புகழ்கண்டு நாமும் புளகாங்கிதம் கொள்ளலாம் அல்லவா?

பாலுமகேந்திராவின் வெற்றிகள் தொடர வாழ்த்துக்கள்.

## பாரதிராஜாவின் "என் உயிர்த் தோழன்"

ரோஜாக்களும், தாமரைகளுமாகப் பூத்துக் குலுங்கும் பாரதிராஜாவின் குளத்தில் இப்போது அக்னிப்பூவும் பூத்திருக்கிறது.

இவரது புதிய படமான 'என் உயிர்த்தோழன்' படமே இப்படி 'அக்கினிப்பூ' என வர்ணிக்கப்படுகிறது.

அரசியல் மாயையில் தொண்டன் எப்படி சின்னாபின்னப்படுத்தப்படுகிறான் என்பதைத் தெளிவு படுத்தும் வித்தியாசமான படம் என்று பலராலும் பாராட்டப்படுகிறது.

'என்னைப் பொறுத்தவரை, இது எனக்கு மனத்திருப்தியைத் தந்த படம் இப்படி ஒரு படம் செய்யவேண்டும் என நினைத்தேன்-செய்து விட்டேன். எவ்வளவு தூரம் வரவேற்பு இருக்கும் என்று தெரியவில்லை. அதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை என்கிறார் பாரதிராஜா.

'அரசியல் மயக்கத்தில் ஒரு சாதாரண தொண்டன் எப்படி இருக்கிறான்? வோட்டுக்காக அவனை அரசியற் தலைவர்கள் எப்படியெல்லாம் உருட்டி விளையாடுகிறார்கள் என்ற நிலைகளைச் சொல்லியிருக்கிறேன் இப்படத்தில் 'என்றும் சொன்னார் அவர்.

## 'சூப்பர் ஸ்டார்' ரஜனியின் ★ வள்ளல் தன்மை ★

இன்று இந்தியாவில் உள்ள நடிகர்களிலேயே வெளிச்சம் போட்டுக்கொள்ளாமற் கல்வி வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி என்று ஏழைகளுக்கு அதிக அளவில் உதவி செய்து வருகிறார் கே. பாலசந்தரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு 'சூப்பர் ஸ்டார் என்று பெயர்பெற்ற ரஜனிகாந்த்.

தேடும் பணத்தில் நாலில் ஒரு பங்கை இப்படிச் செலவிடுவது என்ற இலட்சியத்துடன் செயற்பட்டு வருகிறார் இவர்,

சபாஷ் ரஜனிகாந்த்!

## பாலுவுக்காக ஜேசுதாஸ் பின்னணி

'கேளடி கண்மணி' படத்தின் ஹீரோ பாடகர் எஸ்.பி பாலசுப்பிரமணியம் அவருக்கான மூன்று பாடல்களுக்குப் பின்னணி பாடியிருப்பவர் கே.ஜே.ஜேசுதாஸ்.

# திரைக்கலசம்

தயாரிப்பு: கே.வி. ஆர்.ஸ்ரீ

## ஹிந்தி நடிகர் ஜிதேந்திரா தீவிர ஐயப்ப பக்தரானார்

ஹிந்தி நடிகர் ஜிதேந்திரா தீவிர ஐயப்ப பக்தராகியுள்ளார்.

கோயில் பக்கம் அதிகம் தலைகாட்டாத அவர் முதன்முறையாகச் சில வருடங்களுக்கு முன் சபரிமலைக்குச் சென்றார்.

அங்கு இலட்சக் கணக்கான பக்தர்களின் உணர்வு பூர்வமான வழிபாட்டைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போக...... அன்றிலிருந்து தீவிர ஐயப்ப பக்தரானார்.

அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் காவியுடையுடன் சிரத்தையாக ஒருமாதம் விரதம் இருந்து சபரிமலைக்குச் செல்கிறார்

## ★ தேவதாஸ் நாகேஸ்வரராவ் மகன் நடிப்பில் ★

# இன்னொரு தேவதாஸ்

ஏ. நாகேஸ் வரராவ்...... இப் பெயருக்கு உரியவரையும் அவர் நடிதத 'தேவதாஸ் படத்தையும் தமிழ்ப்பட ரசிகர்கள் என்றென்றும் மறப்பதற்கில்லை.

பிறப்பில் தெலுங்கரான போதிலும் அவர் நடித்த இலட்சாதிபதி, திருட்டுராமன் அனார்க்கலி அதிசயப்பெண் முதலான படங்கள் அருமையான திரைக்காவியங்களாக எடைபோடப் பட்டவை.

அவரைப்புகழின் உச்சிக்கே கொண்டு சென்ற 'தேவதாஸ் படத்தைஇப்போதும்தமிழகத்தில் எந்த தியேட்டரில்திரையிட்டாலும்ஹவுஸ்புல் காட்சிகள் தானாம். இலங்கையில் இப்படம் எப்போது திரையிடப்பட்டாலும் அதற்குத் தனிமதிப்புத்தான். காதல் தோல்வியால் அவர் குடிகாரனாக மாறி நடிக்கும் நடிப்புக்கு ஈடுஇணையில்லை என்றே கருதப்படுகிறது.

கட்டுப்பாடும் ஒழுக்கமும் கொண்ட ஆடம்பரமற்றவராக வாழும் அவர் இன்றும் தெலுங்குப்படங்களில் நடித்துக்கொண்டுதான் இருக்கிறார்.

அவர் தெலுங்கில் நடித்த 'பிரேம்நகர்' படம்தான் தமிழில் 'வசந்த மாளிகை' என்ற பெயரில் மொழிமாற்றல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது அவரதுமகனான நாகார்ஜுனும் தெலுங்கு தமிழ்ப் படவுலகில் தந்தையைப் போல் பிரபல்யம் பெற்றுவருகிறார்.

'இதோ இன்னொரு தேவதாஸ்' என்ற புதிய படத்தில் அவர் சசிகலாவுடன் நடித்துள்ளார்.

இவர் தனது தந்தையின் பெயரை நிலைநாட்டும் வகையில் பெயர் எடுப்பாரா? பொறுத்திருந்து தான் பார்ப்போமே.

## பார்த்திபன் ரோலில் அனில் ஹிந்தியில் 'புதியபாதை'

தமிழில் சக்கைபோடு போட்ட 'புதிய பாதை' ஹிந்தியிலும் தயாராகிறது.

'பெனாம் பாகிஷா' (பெயரில்லா ராஜா) என்று பொருளாம். என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் பார்த்திபன் நடித்த பாத்திரத்தில் அனில் கபூர் நடிக்கிறார். ஹீரோயின் ஜஹிசாவ்லா. தமிழில் சீதா நடித்த பாத்திரம் தனக்குக் கிடைத்ததில் மிக மகிழ்ச்சி கொள்கிறாராம் இவர்.

காதல் சப்ஜெக்ட் சம்பந்தப்பட்ட படங்களைத் தவிர வெயிட்டான ரோல்களிலும் என்னால் நடிக்க முடியும் என்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். படத்தின் கதையைக் கேட்டவுடனேயே எனக்கு ரொம்பப் பிடித்துப் போய் விட்டது' என்கிறார்.

## தந்தை ஜெமினிகணேசன் முன்னிலையில்

# ஹிந்தி நடிகை ரேகா ★ திருமணம் ★

தமிழ்ப் படவுலகில் காதல் மன்னன் என்றால் பழம் பெரும்நடிகர் ஜெமினிகணேசன் ஒருவரைத்தான் குறிக்கும். அந்தளவுக்கு பெருமையுடன் ஒரு காலத்தில் தென்னக சினிமா உலகில் உலா வந்தவர் ஆவர்.

ஆணழகனான அவரது "பிரேமபாசம், குணசுந்தரி, மிஸ்ஸியம் மா"முதலான படங்கள் ரசிகர் மனதில் என்றும் அழியா இடத்தைப் பெற்றுள்ளவை.

இப்போதெல்லாம் அவருக்குப் படவுலக வாய்ப்புகள் குறைந்து விட்டன. புது முகங்கள் படவுலகை ஆக்கிரமித்துக் கொண்ட போதிலும் தயாரிப்பாளர்கள் அவரை முற்றாக மறந்து விடவில்லை.

பொன்மனச் செல்வன் உட்பட குறிப்பிட்ட சில படங்களில் சமீபத்தில் அவர் நடித்துள்ளார், சில படங்களில் நடித்தும் வருகிறார்.

நடிகை புஷ்பவல்லி மூலம் அவர் மகளான ஹிந்திப் படவுலகின் கனவுக்கன்னி ரேகாவுக்கு அண்மையில் திருமணம் நடந்தது.

ரேகா செக்ஸ் நடிப்பின் மூலம் மாத்திரம்என்றில்லாது ஆழமான பாத்திரங்களிலும் தோன்றி இலட்சக்கணக்கான ஹிந்தி, ரசிகர்கள்மனதில் தனியிடம் பிடித்துள்ளவர்.

தன் அந்தரங்க வாழ்க்கை பற்றி அவர் வெளிப்படையாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்ததால் அவரைப் பற்றி ஒரு தப்பான அபிப் பிராயம் கூட ஏற்பட்டிருந்தது. பல கிசுகிசுக்கள் அவரைப் பற்றி வந்தன.

இவற்றுக் கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கும் வகையில் அவர் சமீபத்தில் தனக்குஏற்றவராகக் கருதிய சமூகத்தின் பெருட்புள்ளி ஒருவரைத் திருமணம் செய்து கணவராக ஏற்றுக் கொண்டார் திருப்பதியில். கணவர் பெயர் முகோஸ் அகர்லால் தொழிலதிபர்.

திருமணம் தென்னகத்தில் 'ஜாம் ஜா மென்று நடந்தது. தந்தை ஜெமினியும் வந்து முன்னின்று மகளை ஆசிர்வதித்தார்.

எனினும் ரேகா தொடர்ந்தும் படங்களில் நடிப்பார் என்றே படவுலகில் பேசப்படுகிறது.

## சாவுடன் போராடினார் எலிஸபெத் டெய்லர்

கடும் சுகவீனமுற்றிருந்த உலகப்புகழ் நடிகை எலிஸபெத் டெய்லரின் உடல் நிலையில்முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது நிமோனியாவினால் பாதிக்கப் பட்டுத் தீவிரசிகிச்சைப்பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் 58 வயதான இவர் நல்லமுறையில் குணமடைந்து வருவதாக நுரையீரல் நிபுணர் டாக்டர் பெர்னாட் கூறினார். ஏழுதடவை மணம் முடித்தவரும் ஒஸ்கார்பரிசுகளைப் பெற்றவருமான எலிஸபெத் டெய்லரின் படுக்கை அருகில் அவரது இருபுதல்வர்களும், இருபுதல்விகளும் இருக்க பல தினங்களுக்குப் பின் அவர் முதல்தடவையாகப் புன்னகை புரிந்தார். அவருக்குப் புற்றுநோயோ, எய்ட்ஸ்நோயோ இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர் வாரக்கடைசியில் அவரது உயிருக்குஆபத்து ஏற்பட்டிருந்தது.

# பறக்கும் தட்டுகள் பற்றிய பலவிதக் கருத்துக்கள்

**1974** ஆம் ஆண்டு மே மாதம் தென்னாபிரிக்கா எல்லைக்கு அருகில் உள்ள சலிஸ்பெரி என்ற ஓர் நகர வீதியில் இரவில் தமது காரில் இரு புதுமணத் தம்பதிகள் சென்று கொண்டிருக்கின்றனர். கார்நகரத்தைத்தாண்டி மனித நடமாட்டம் அற்ற பகுதியூடாக விரைந்து கொண்டிருக்கிறது. திடீரென அவர்களது காருக்கு முன்பாக நீல நிறத்திலான வெளிச்சம் ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. காரில் கடும் குளிர் பரவத் தொடங்குகிறது தம்பதிகளும் நடுங்கத் தொடங்கி விட்டனர்.

இவர்கள் பயணம் செய்த பெர்ஜோகார் தன் இஷ்டப்படி இயங்கத் தொடங்கியது. முகப்பு லைட்டுக்கள் அணைந்தன பிரேக் தொழிற்படவில்லை. பெற்றோல்மானியில் இருந்த முள் பூச்சியத்தைக் காட்டியது. கார் மணிக்கு 190 கிலோமீட்டர் வேகத்தில் செல்ல அதைத் தொடர்ந்து அந்த இனந்தெரியாத ''பறக்கும் தட்டும்'' பறந்து செல்கிறது.

இதற்குள் காலை ஆறுமணியாகிவிட்டது. இந்நேரத்தில் இத்தம்பதிகளும் மயங்கி விட்டனர். மீண்டும்விழித்தபோது காலைஎட்டு மணி. அந்த இரண்டு மணித்தியாலமும் என்ன நடந்தது என்பது அவர்களுக்கு தெரியவில்லை. ஆனால் காரின் மணிக்கூடு ஏழு மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. காரின் மீற்றரின் வாசிப்பு அந்த இரு மணித்தியாலத்தில் 290கிலோ மீட்டர்கார் ஓடிஇருந்ததாக காட்டியது.

1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தேழாம் திகதி ரஷ்யாவின் வொரேநெஸ் நகரில் பறக்கும் தட்டு ஒன்றுவந்து இறங்கியது. இதிலிருந்த மனிதர்கள் வெள்ளி நிறத்திலான உடை அணிந்திருந்தனர். கண்களில் இருந்து பிரகாசமான ஒளி காணப்பட்டது. இவர்களை சிறுவர்கள் பார்த்திருக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டு தென்னமெரிக்க நாடான சிலியின் எல்லையில் பறக்கும் தட்டு ஒன்றைக்கண்ட எல்லைக் காவல் இராணுவத்தினர் அதனை ஆராயும் பொருட்டு அருகில் சென்றபோது அக்குழுவின் தளபதி திடீரென காணாமல் போனார். இவர் பூமியில் புதையவில்லை, வானத்தில் எழுந்து மறையவில்லை. திடீரென மறைந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தளபதியை வீரர்கள் நாலாபுறமும் தேடினர் பதினைந்துநிமிடங்களின் பின் இவர் பலமைல்களுக்கு அப்பால் இருந்து மீட்கப்பட்டார். அதிர்ச்சியடைந்திருந்த அவர் தமக்கு என்ன நடந்தது என்பதை ஞாபகப்படுத்த முடியாது திண்டாடினார் இதற்கு மேல் அந்த பதினைந்து நிமிடம் தான் அவர் காணாமல் போயிருந்தாலும் அவரது மணிக்கூடு ஐந்து நாட்களுக்கு முன்னான திகதியைக் காட்டியது. அவரில் தாடி கூட வளர்ந்து விட்டது.

அண்மையில் அமெரிக்காவில் பெண்ணொருத்திக்கு வேற்று கிரகவாசிக்கு பிறந்த குழந்தை ஒன்று நீண்ட காதுகளுடன் பிறந்துள்ளது. இது வைத்திய உலகிற்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து விட்டது.

மார்ச் 1977 பிரிட்டனில் மாலை வேளை, இருவர் புடவைத் தொழிற்சாலையில் பணி புரிந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில தமக்கு எதிரே வீதியில் சுருட்டு வடிவிலான ஒரு பறக்கும் தட்டு தரை இறங்கியிருந்ததைக் கண்டனர். அதில் பல நிறத்திலான விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. இச்சம்பவம் நடந்து ஒருவாரமாக இருவருக்கும் இனம் புரியாத தலையிடியும் பசியின்மையும் காணப்பட்டது.

ஒக்டோபர் 1973 அமெரிக்காவில் விமானப்படை ஹெலிகப்டர் ஒன்று பறந்து கொண்டிருக்கையில் அதற்கு முன்னால் ஐந்நூறு யார் தூரத்தில் சாம்பல் நிறமான உலோக நீளமான அமைப்பு ஒன்று பறந்து கொண்டிருந்தது. திடீரென அது தனது வேகத்தை கூட்டி மறைந்து விட்டது. இச்சந்தர்ப்பத்தில் அதில் இருந்து எவ்விதமான என்ஜின் சத்தமும் கேட்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்சொன்ன சம்பவங்கள் உலகில் பறக்கும் தட்டுகள் தோன்றியதற்கான சம்பவங்களில் ஒரு சிலதான். இது வரை பல்லாயிரக் கணக்கான இத்தகைய சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன. எனினும் இப்பதிவுகளை ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சியாளர்கள் இவற்றில் தொண்ணூறு வீதமானவை விமானம், பறக்கும் பலூன். இயற்கை வானிலை அமைப்பு ஆகியவற்றை பிழையாக கணிப்பிட்டு மக்கள் இவற்றை தெரிவித்ததாக கூறியுள்ளனர். சிலர் தமது கற்பனையையும் கூட கட்டவிழ்த்து விட்டுள்ளனர். எனினும் மிகுதி பத்து வீதமான சம்பவங்களுக்கு இன்னும் விடை காண முடியாமலேயே இருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

து. துஷ்யந்தன்

இத்தகைய பறக்கும் தட்டுகள் பற்றிய செய்திகளை நாம் கேள்விப்படும் போது எம்மில் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் முன்னேறிய 'யாரோ' மனிதர்கள் வேறு உலகில் இருந்து வருவதாகவே தென்படுகிறது. 'இவர்கள்' எமது பூமிக்கு வரும் 'வாகனங்கள்' கூடஎமது விமானங்களையோ ரொக்கட்டுகளையோ போலல்லாது தட்டையான வட்டத் தட்டுகளாகவோ, சுருட்டு வடிவிலோ, தொப்பி வடிவிலோ காணப்படுவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

1970 களில் அமெரிக்க விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட ப்றக்கும் தட்டு ஆராய்ச்சியில் பறக்கும் தட்டைக் கண்டவர்கள் பறக்கும் தட்டு 'மனிதர்களுடன்' பேசியவர்கள் ஆகியோரின் நேரடி அனுபவங்கள் அவர்கள் மூலம் பெறப்பட்ட போது சிலரின் அனுபவங்க்ள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தன. விளக்கம் கூறமுடியாத பல சம்பவங்கள் காணப்பட்டன. இதனால் பறக்கும் தட்டு ஆராய்ச்சியில் எவ்விதமான முடிவையும் எடுக்க முடியாத நிலையில் அந்த ஆராய்ச்சி இரண்டுவருடங்களில் கைவிடப்பட்டது.

பறக்கும் தட்டுகளில் பூமிக்கு வந்தவர்களுடன் தொடர்பு கொண்டவர்களின் கூற்றுக்களின்படி 'அவர்கள்' தம்மை அழைத்துச் சென்று சில ஆராய்ச்சிகளை தம்மீது மேற்கொண்டதாகவும், பூமியில் இருந்து சில மரங்கள், மண் மாதிரிகள் போன்றவற்றை தம்முடன் எடுத்துச் சென்றதாகவும் தெரிகிறது.

அத்துடன் அந்த பறக்கும் தட்டு மனிதர்கள் ஐந்தடி உயரமும் வழுக்கைத்தலையர்களாகவும் பெரிய கண்களை உடையவர்களாகவும், காதோ மூக்கோ இருக்கவில்லை எனவும் இவர்களை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். அவர்களின் தோற்றம் பற்றி பலர் பலவிதமாக விபரித்த போதிலும் அறுபது வீதத்திற்கு மேற்பட்டோர் மேற்கூறிய வடிவமைப்பிலேயே அவர்கள் காணப்பட்டதாக கூறுகின்றனர்.

சரித்திரவியலாளர்களின் முடிவின்படி இவ்வாறு பறக்கும் தட்டுகளில் வேற்றுலகவாசிகள் பூமிக்கு வருவது என்பது இன்று நேற்று நடைபெற்று வருவதல்ல பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே இவர்கள் பூமிக்கு வந்து போகின்றனர்.

மத்திய அமெரிக்க மாயா நாகரிக கல்வெட்டுகளில் புதுமையான தோற்றமுள்ளமனிதர்கள் ரொக்கட் ஒன்றில் ஏறுவதற்கு ஆயத்தமாவதான படங்கள் காணப்படுகின்றன. அவர்கள் தற்போது விண்வெளிக்கு செல்லும் வீரர்கள் அணிவதைப் போன்ற ஹெல் மட்டுகளை அணிந்திருப்பதையும் அவற்றில் காணலாம்.

இதேபோன்று தென்னமெரிக்க நாடான பெருவில் தோன்றிய இன்கா நாகரிக சுவடுகளிலும் பறக்கும் தட்டு, வேற்றுலக மனிதர்களின் படங்கள் காணப்படுகின்றன. இத்துடன் இந்த இன்கா நாகரிக மக்களுடன் இந்த பறக்கும் தட்டு மனிதர்கள் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இந்நாகரிகத்தின் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களின் அமைப்பில் கற்கள் இடைவெளியின்றி அடுக்கப்பட்ட விதம் இன்றும் எல்லோரையும் வியப்பிலாழ்த்துகிறது. இது மட்டுமல்ல பெருவில் 'நாஸ்கா' என்ற நகரில் அக்காலத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான விமான ஓடு பாதைகள் பூலோகவாசிகள் விமானம் என்றால் என்ன என்பதை அறிய முன்னரே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓடு பாதைகள் பல கிலோமீட்டர் தூரத்திற்கு எவ்விதவளைவும் இன்றி ஒரே நேர் கோட்டில் அமைக்கப்பட்டிருப்பது விண்ணில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேசமயம் இந்த இன்கா நாகரிகங்கள் ஸ்பானிய படையெடுப்பினால் அழிந்து விட்டதாக வரலாறு கூறியபோதிலும் ஒரு படையெடுப்பினால் முழு இனமும் நாகரிகமும் முற்றாக ஒரு நாளில் அழிந்து விடமுடியுமா? ஆம் இன்கா நாகரிகம் படிப்படியாக மறைந்ததாக சான்றுகள் இல்லை. திடீரென இங்குள்ளவர்கள் இல்லாது போனதற்கும் பறக்கும் தட்டு மனிதர்களுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என தற்போதும் ஒரு குழப்பம் பலரிடையே உண்டு. சகாராப் பாலைவனத்தில் மீட்கப்பட்ட சில பாறை ஓவியங்களிலும் இத்தகைய வினோத மனிதர்களும் அவர்களுடன் வட்டமான அமைப்புடைய பறக்கும் தட்டுகளும் வரையப்பட்டிருக்கின்றன.

சரி, இவர்கள் ஏன் இவ்வாறு பூமிக்கு அடிக்கடி வந்து போகின்றனர்? பலர் கூறிய தகவல்களில் இருந்து இரண்டு முடிவுகளை எடுக்க முடியும். ஒன்று இவர்கள் தமக்கு அடுத்தபடியாக வளர்ச்சி கண்ட பூமியின் வளங்கள் மற்றும் தமக்கு வேண்டிய ஆனால் 'அவர்களின்' இடங்களில் இல்லாத கனிப்பொருட்களை சேகரிப்பதற்கு வந்து போகலாம். இரண்டாவது அவர்கள் எம்மை 'மிரட்ட' வந்து போகலாம். இரண்டாவது காரணம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(12ம் பக்கம் பார்க்க

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**20 - 5 - 90 முதல் 26 - 5 - 90 வரை**

## மேடம்:

பிதாவழி யுதவி, வாகனசுகம், வணிகர்கள் இலாபம், கல்வியாற் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர், வெளியூர் போனவர் வருகை, இளைய சகோதர வழியுதவி, மாமன் வழியிற் சுபகாரியம், மனை பூமிச் சேர்க்கை, பிரிந்தவர்கள் ஒன்றுசேருவர்.

## இடபம்:

உயர் பதவி, கல்வியாற் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர், மனையிற் சுபகாரியம், தேடியவர் வருகை, தடைப்பட்ட பண வரவு, வாக்கு வசீகரம், வெளியூர் போனவர் வருகை, மூதாதையர் சொத்துச்சேரும், வணிகர்கள் இலாபம்.

## மிதுனம்:

பிதாவழி பொருள், மூத்த சகோதரவழி யுதவி, இராஜ மரியாதை, கல்வியால் நன்மை, காதலர் மகிழ்ச்சி, உயர்பதவி மூலம் இடமாற்றம், எண்ணியது நடக்கும், புதுமனைச் சேர்க்கை, புகழ் தேடிவரும், வணிகர்கள் இலாபம்.

## கடகம்:

உடல் ரோகம், பணச்செலவு, வாகன நஷ்டம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் மனக் கிலேசம், புதுத்தொழில், தெய்வ வழிபாடு, நீண்டநாள் பிணக்குத் திரும், மனை பூமியால் பிணக்கு, இளைய சகோதரவழி யுதவி, வாக்குக் கலகம்.

## சிங்கம்:

விவாக நிச்சயம், பணப் புழக்கம், உயர் பதவி, மனையிற் சுபகாரியம், விருந்துபசாரம், தெய்வ வழிபாடு, தேடியவர் வருகை, மாமன்வழி யுதவி, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், தூர தேச பிரயாண நிவர்த்தி.

## கன்னி:

உயர்பதவி மூலம் இடமாற்றம், உடல் ஒட்டிய ரோகம், வாகன மாற்றம், விவாகத் தடை, புதுத்தொழில், கல்வியால் நன்மை, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், இளைய சகோதர வழியுதவி, அன்னியராலுதவி, தேடியவர் வருகை.

## துலாம்:

தொழிற் தடை, வாகனமாற்றம், உயர்பதவி, உத்தமர்கூறவு, புகழ் தேடிவரும், மனையிற் சுபகாரியம், விவாகநிச்சயம், மூத்தசகோதர வழியுதவி, புத்திரர் மகிழ்ச்சி, பணவரவு, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

## விருச்சிகம்:

லட்சுமி கடாட்சம், பண வரவு, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் வைத்தியம் சோதிடம் இயந்திரத் தொழில் மூலம் இலாபம், தூரதேசம் போனவர்கள் வருகை, மாங்கல்ய நிச்சயம்.

## தனுசு:

மாதாவழி யுதவி, வாகன மாற்றம், உயர்பதவி, கல்வியால் சித்தி, பிரிந்த காதலர் ஒன்று சேருதல், புதுத்தொழில், புகழ் தேடிவரும், வாக்குப்பலம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

## மகரம்:

உத்தமர்களுறவு, வாக்கு வசீகரம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், புதுத்தொழில், புண்ணிய வழிபாடு, தடைப்பட்ட தொழில் கிடைக்கும், களஸ்திர வழியுதவி, காதலர் ஒன்று சேருவர்.

## கும்பம்:

நெடுநாள் பிணக்குத் தீரும், பிதாவழி யுதவி, வாகனசுகம், வாக்கு வசீகரம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் சமபலன், எண்ணிய எண்ணம் தடைக்குப்பின் நிவர்த்தி, இராஜமரியாதை, புது மனைச்சேர்க்கை.

## மீனம்:

புண்ணிய வழிபாடு, புகழ் தேடிவரும், வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம், தேடியவர் வருகை, இளைய சகோதர வழியுதவி, மாமன்வழி யுதவி, மங்களகர நிவர்த்தி, எண்ணிய எண்ணம் நிறைவு.

## நூல்

9ம் பக்கத் தொடர்ச்சி

சமுதாயம் இரண்டு வர்க்கத்தையும் கொண்டதுபோல, இலக்கியமும் இரண்டு வர்க்கச் சார்புடையதாக இருக்கிறது. பூர்ஷுவா வர்க்கச் சார்புள்ள இலக்கியத்தைப், புரோலிடேரியன் சார்புள்ள அளவுகோல்களைக் கொண்டு மதிப்பிடுவதும், பாட்டாளி வர்க்கச் சார்புள்ள இலக்கியத்தை மத்தியதர வர்க்கச் சார்புள்ள அளவுகோல்களைக்கொண்டு மதிப்பிடுவதுதான் சிக்கலை உண்டாக்குகிறது'

என்று துணிந்து கூறும் ஆசிரியர் ஒரு படைப்பிலக்கியத்தை மதிப்பிடுவதற்குத் தாம் கொண்டுள்ள அடிபடைக் கருதுகோளாக ஐந்து அம்சங்களைக் குறிப்பிடுகின்றார்.

1.படைப்பில் உண்மையும் நேர்மையும் இருத்தல் வேண்டும்.

2.படைப்பாசிரியர் எடுத்துக்கொண்ட பொருளைக் கலநையமாகக் கூறியிருத்தல் வேண்டும். உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான உருவத் தொடர்பமைதி·சிருஷ்டித் தன்மை, புத்தாக்கமான பொருத்தமுடைய பிரயோகங்கள் ஆகியன இருத்தல் வேண்டும்.

3.படைப்பாளியின் படைப்பினால் பெறப்படும் பயன்

4.மதிப்பீடு செய்பவன் பெறும் அனுபவம்.

5.கலைநயம் என்பது முற்றிலும் உருவம் பற்றிய விஷயம் இல்லை. 'கலைநயம்' என்பது இங்கு உள்ளடக்கம் உருவம் இரண்டையும் தொட்டுச் செல்கிறது

திறனாய்வில் ஈடுபடுவோரை மூன்று பிரிவினராக வகைப்படுத்தி கே.எஸ் சிவகுமாரன், அம்மூவகையாரது அணுகு முறைகளையும், அவ்வவரால்/இலக்கியம் பெறும் திறன்பயனையும் விளக்க முற்பட்டுள்ளமை சிந்தனையைத் தூண்டுவதாய் உள்ளது. இயன்ற அளவு இம்மூவகையாரும் யார் எவர் என்ற பட்டியல் ஒன்றையும் பத்தி எழுத்தாளக் (கொலம்னிஸ்ட்) என்ற வகையில் தரத் தவறவில்லை.

பொதுவாக நோக்கும்பொழுது கலை இலக்கியத் திறனாய்வு சார்ந்த பல தகவல்கதளையும் ஒரேபார்வையில் அறிந்து கொள்ளத்தக்க வகையிலே இந்நூல் சுருக்கமாகவும், ஓரளவு வரலாற்றுக் கண்ணோட்டம் உடையதாகவும், பக்கச்சார்பற்ற தாகவும் எழுதப்பட்டுள்ளமை விதந்து கூறவேண்டியதே. இவ்வகையில் கே.எஸ்.சிவகுமாரன் எமது பாராட்டிற்கு உரியவர்தாம்.

## ஒரே காலத்தில்

3ம் பக்கத் தொடர்ச்சி

னதும் திருவருளை முறையே பெற்றவர்களான பண்டிதமணி அவர்களும் புலவர்மணி அவர்களும் நாவலர் பரம்பரையை விளக்கஞ் செய்துவைக்க உதித்த செந்தமிழ்ச் சைவச் சான்றோர்கள்,

நாவலர் காவிய பாடசாலையில் ஒரே காலத்திற் சேர்ந்து படித்து பேராசிரியர்களாகி ஆசிரிய கலாசாலைகளில் பணிபுரிந்தவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இருபதாம் நூற்றாண்டின்இறுதிவரை நாவலர் வழியில் அருந் தொண்டு ஆற்றிய அறிஞர் பெருமக்கள்.

'சி.கணபதிப்பிள்ளையும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள்.'

மேற்கண்டவாறு உள்ளதும் நல்லதும் என்ற நூலில் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கூறியிருப்பது பல்லாற்றானும் பொருத்தமுடையது.

## இனிய

5ம் பக்கத் தொடர்ச்சி

டுவது அதனால் கார்ட்டூனை 'கருத்தூண்' என்று நாம் அழைக்கிறோம் என்றார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் தினத்தந்திப்பத்திரிகை கார்ட்டூனை கருத்துப்படம் என்றே குறிப்பிடுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுந்தர் அவர்களிடம் கார்ட்டூனுக்கும் கேலிச்சித்திரத்துக்கும் இடையில் வேறுபாடு இருக்கிறதா என்று கேட்டபோது, கேலிச்சித்திரம் சிரிக்கத்தான் வைக்கிறது ஆனால் கார்ட்டூன்சிரிக்கவைப்பதோடு சிந்திக்கவும் வைக்கிறது என்றார்.

சிரித்திரன் சுந்தர் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த நகைச்சுவைகளில் இருந்து ஒன்றை இப்போது சுவைப்போம்,

ஒருவர்: தமிழன் ஜெர்மனியில் காணி வாங்கி, கலியாணம் பண்ணிக்குடியேறினால் …… …

மற்றவர்: தாலிகட்டி. வேலிகட்டி, வேலிக்கும் வழக்கும் பேசுவான்,

இந்த நகைச்சுவை சிரிக்க மட்டுமா வைக்கிறது சிந்திக்கவும் வைக்கிறதல்லவா?

சிரித்திரன் சுந்தர் அவர்களிடம் நீங்கள் எப்போது எழுத்துலகிற்குள் நுழைந்தீர்கள் என்று கேட்டதற்கு சிரித்திரன் சஞ்சிகைக்கு ஆசிரியர் கருத்து என்ற பகுதி இடம் பெற வேண்டியது மிக அவசியமாகியது. இப்பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அப்பகுதியில் நிலக்கண்ணாடி என்ற தலைப்பில் எழுத முயன்றபோதே எழுத்துலகிற்குள் நுழைந்தேன்.

சிரித்திரனில் மகுடியார் கேள்வி பதிலை ஆரம்பித்தீர்களே இந்த மகுடியார் கேள்வி பதிலை ஆரம்பித்து நீங்களே கேள்விகளுக்குப் பதில்சொல்லக் காரணமாக இருந்தவர் யார்?

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருக்கும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எனது நெருங்கிய நண்பர். அவரிடம் சிரித்திரனில் கேள்வி பதிலை ஆரம்பிக்க விரும்புகிறேன் யாரிடம் இந்த கேள்வி பதில் பகுதியை ஒப்படைக்கலாம் என்று கேட்டதற்கு அவர் நீங்கள் தான் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். அப்போதுதான் நன்றாக இருக்கும் என்றார். அவரது வேண்டுதலைத் தட்டமுடியாமல் மகுடியார் கேள்வி பதிலை இரண்டாவது இதழில் (1965 ஒக்ரோபர் முதலாம் திகதி) ஆரம்பிக்க முடிவு செய்தோம்.

கேள்விகளுக்கு எங்கு போவது என்று திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் கேட்டேன் அவர் இரண்டாவது இதழில் வரவேண்டிய கேள்வகளை நானே கேட்கிறேன் பதிலை நீங்கள் எழுதுங்கள் என்றார்.

திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மகுடியார் சுந்தரிடம் கேட்ட கேள்விகளில் முதல் மூன்று கேள்விகளையும் அதற்கு மகுடியார் தந்த பதில்களையும் வாசகர்களிடம் சமர்ப்பிக்கின்றோம்.

கே: ஒரு பெண்ணை அழகிற்கா, பணத்திற்கா, குணத்திற்கா திருமணம் செய்வது?

ப: அழகு ஐந்து பிள்ளைகளுக்குப் பின் அகன்று விடும் பணம் பத்துப் பிள்ளைகளுக்குப் பின் பறந்துவிடும் குலையாமல் இருப்பது குணம் மட்டும்தான்.

கே: கலியாணத் தரகர் அகராதியிலிருந்து அழிக்க விரும்புவது எது?

ப: காதல்

கே: பெண் குழந்தை பிறந்தால் ஏன் சர்க்கரை அன்பளிக்கின்றார்கள்.

ப: பணம் சர்க்கரை போல் கரைந்து விடும் என்பதற்காக.

முதல் மூன்று கேள்விகளையும் அதற்கான பதில்களையும் ரசித்த ரசிகர்களே அன்பு நெஞ்சங்கள் என்ற சிரித்திரன் வாசகர் மகுடியார் கேள்வி பதிலைப் பற்றி எப்படி சொல்கிறார் தெரியுமா?

சோக்கிரட்டீஸ் பாணியிலே
சொல்லெல்லாம் கல்
லாகி
மொக்குச் சமுதாயத்தின்
முகத்தைப் பதம் பார்க்
கும்
என்று கூறுவதோடு
அவ்வாசகர்
நின்று விடாமல் இப்படி
யும் சொல்கிறார்
மகுடி இலக்கியத்தே
பகுடி படுத்திருக்கும்
பகுடி பின்னாலோ …..

பழுத்த நெருப்பிருக்கும் அந்த வாசகர் சொல்வதில் உண்மையில்லாமலில்லை. மகுடியார் கேள்வி பதில் உயிருள்ளஉவமை கொண்டு உலகம் அளக்க வந்த மகுடி இலக்கியங்கள் மற்றொரு குறள் வடிவம் தான்.

சஞ்சிகைகளை வெளியிடுபவர்கள் கேள்வி பதில் பகுதியை ஆரம்பித்திருக்கின்றார்கள். ஆனால் மகுடியின் கேள்வி பதிலுக்கு நிகராக எந்தவொரு கேள்வி பதிலும் இதுவரை அமையவில்லை.

செல்வி ராதா பொத்துவிலிருந்து ஒரு பத்திரிகையாளார் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று மகுடியாரிடம் கேட்க அதற்கு ஒரு நாட்டின் நிலைக் கண்ணாடியாக இருக்க வேண்டுமேதவிர பூதக் கண்ணாடியாக மாறக் கூடாது என்றுபதிலளித்தார்

திருச் செல்வம் என்பவர் வவுனியாவில் இருந்து மகுடியாரே தமிழினம்நலிவுற்றுப் போவதற்குக் காரணம் என்ன என்றார் சினிமா ஸ்ருடியோ (ஏ)படம்தயாரிப்பதாலும் சைவஹோட்டல் ஈ நிறைந்த பட்சணம் தயாரிப்பதாலும் என்றுநகைச்சுவையாக விடைபகர்ந்தார்.

கணபதி நல்லூரில் இருந்து மனிதன் எதைச் செய்யத் தவறிவிட்டான் எனக் கேட்க மகுடியார் பறவைகளைக் கண்டு விமானம் படைத்தவன் கவரிமானைக் கண்டு மானத்துடன் வாழக்கற்றுக் கொள்ளவில்லையே என வேதனையாகவிடைபகர்ந்தார்.

என் சண்முகம் பதுளையில் இருந்து எதிர்காலப் பெண்களின் உடை எப்படி இருக்கும் என்று கேட்க, ஆண்களின் உள்ளத்தை உடைக்கும் வகையில் இருக்கும் என தீர்க்க தரிசனத்துடன் மகுடியார் விடையளித்தார்.

மகுடியார் பதிலை ஆரம்பிக்க வைத்து சிரித்திரன் சுந்தருக்கு மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடிக்கச் செய்தவர் திரு அன்ரன்பாலசிங்கம் என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அவர் சிரித்திரன் சுந்தர் மீது வைத்திருந்த அன்பு காரணமாக கடந்த பத்தாந்திகதி நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற சிரிந்திரன் சுந்தரின் 'சிரித்திரன் சித்திரக்கொத்து' நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து அவரை வாழ்த்திச் சென்றார்.

சமுதயத்தின் பிரச்சினைகளை நாகைச்சுவையாக வெளிப்படுத்தி நின்றவர் திரு சுந்தர். நகைச்சுவை வாயிலாக சொல்ல முடியாத அரியகருத்துக்களை சுலபமாக்ச் சொல்லியவர். இவருடைய வெற்றிக்கு இவரது பாரியார் பெருந்துணைபுரிந்தார் என்பதை நாம் பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சிரித்திரனின் முதல் இதழை சுந்தர் அவர்கள் வாசகர்கைகளில் தவழவிட்டபோது தர்மசீலன் என்பவர் பண்டாரநாயக்கா மாவத்தையில் கொழும்பு 12 இல் இருந்து இப்படி எழுதினார்.

தங்கள் முழு முயற்சியுடனும்திறமையுடனும்வெளியிட்டிருக்கும் ஹாஸ்யப் பத்திரிகையான சிரித்திரன் எல்லோரும் மன முவந்து பெருமையோடுவாசிக்கக்கூடியது. ஈழத் திருநாடான இலங்கையில்இதுவரை எவ்வாளவோ பத்திரிகைகள் வந்திருக்கின்றன ஆனால் அவைகள் எல்லாம் சினிமா, காதல், கதைகள் போன்றவைகளையே பிரசுரிக்கின்றன இதுவரை சிரித்திரனைப்போல ஹாஸ்யப் பத்திரிகை வெளிவரவில்லை. இலங்கையில் முதன் முதல்ஒரு ஹாஸ்யப் பத்திரிகையைத் தொடங்கிய பெருமை சிரித்திரனையே சாரும் என்று எழுதியிருந்தார்.

சிரித்திரன் சுந்தர் அவர்களிடம் பேட்டிக்காகச் சென்றபோதுசுகயீனமாக இருந்த நிலையிலும் எம்மை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க அவர் தவறவில்லை.

## பறக்கும்

11ம் பக்கத் தொடர்ச்சி

மனிதர்களைமிரட்டுவதற்கு வருபவர்களேயானால் ஏன் அநேக பறக்கும் தட்டுகள் மனிதவாசம் அற்ற இடங்களில் இறங்குகின்றன. அப்படியும் யாரையும் கண்டால் உடனடியாக ஏன் இது பறந்து மறைந்துவிடுகிறது என்பது பலரும் எழுப்பும் வினாவாகும்.

பறக்கும் தட்டுகளின் அமைப்பை நோக்கும் போதும் அதன் வேகம், சத்தமின்றி பறக்கும் முறை ஆகியவற்றை நோக்கும் போதும் இதை உருவாக்கியவர்கள் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் எவ்வளவுக்கு உயர்ந்துள்ளனர் என்பதை ஊகிக்க முடிகிறது.

ஆரம்பத்தில் இத்தகைய பறக்கும் தட்டு விவகாரங்களை வல்லரசுகள் சந்தேக கண் கொண்டே பார்த்தன. எதிரிகள் உளவு அறிய இத்தகைய சாதனங்களை பயன்படுத்துகின்றனரோ என சந்தேகித்தனர். ஆனால் தாமும் இவற்றைப் போன்ற விமானங்களை உருவாக்கி பறக்க விட்டபோது அவை ஐந்தடிக்கும் மேலே உயர முடியாது தத்தளித்த போதே வல்லரசுகள் தமக்கும் அந்த பறக்கும் தட்டுவாசிகளுக்கும் இடையிலான தொழில் நுட்ப இடைவெளியை அறிந்து கொண்டனர்.

பறக்கும் தட்டுகள் வெறும் கற்பனைதான் என்று சிலர் வாதிடுகின்றனர். சிலர் இது உண்மைதான் என அழுத்தமாக கூறுகின்றனர்.எம்மை விடவும் அறிவில் கூடியவர்கள் இருக்கின்றனர் என்பதை ஏற்க மறுக்கும் குறுகிய மனப்பான்மையுடையவர்களே இவற்றை கற்பனை என மூடி மறைக்கின்றனர். எம்மைவிட அறிவில் கூடியவர்கள் எங்கே உண்டு என ஏற்பவர்கள் இவற்றை உண்மை என ஏற்கின்றனர். இது உளவியல் ரீதியில் உண்மையாகும்

எது எப்படியோ பறக்கும் தட்டுகள் பற்றி இன்னமும் முடிவுகள் 'எடுக்கவேண்டிய தேவை உள்ள போதிலும் அதைப்பற்றி ஆராய எமக்கு பலம் இன்னமும் ஏற்படவில்லை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று.

## ஒரு நாள்

9ம் பக்கத்தொடர்ச்சி

பாக்கிஸ்தான் அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

சர்வதேச ஆடக்காராகர மாறிவரும் அக்ரமின் பந்து வீச்சில் துடுப்பாட்டமும் சகல துறைஆட்டக்காரராகவிளங்கும் அயன் போத்தம், ரிட்சட்காட்லி, இம்ரான் கான், கபில் தேவ் ஆதவ் ஆகியவர்களின்வரிசையில்இடம்பிடித்துவிடுவாரென்று கிரிக்கெட் வல்லுநர்கள் கருதுகிறார்கள் 23 வயதான அக்ரம் இடது கைப் பந்துவீச்சாளர். இவரே தனக்குப் பின் பாக்கிஸ்தான் அணியில் சகலதுறை ஆட்டக்காரராக திகழ்வார் என்ற

நம்பிக்கை தனக்குண்டு என்று அண்மையில் நடந்த பத்திரிகைகள் பேட்டியின் போது இம்ரான்கான் குறிப்பிட்டுள்ளார்,

கிரிக்கெட் ஆடும் மற்றைய நாடுகளைப் போலல்லாமற் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர்'இம்ரான் கானிற்கு' மதிப்பும், மரியாதையும் கொடுக்கின்றது. வீரர்களை அணிக்குத தெரிவு செய்யும்போதும் இவர் சிபாரிசு செய்வோரிற்கு முதலிடம் கொடுக்கின்றது. சமீபத்திய இம்ரான்கானின் தெரிவுகளான'வக்கார் யூனுஸ்' 'ஆசிப் ஜவாத்' இதனை நிரூபிக்கின்றது. 17 வயதான 'ஜவாத் ஒரு நடுத்தரப் பந்து வீச்சாளர் எனக் கணிக்கப்பட்டுள்ளார்.

யூனிசின் பந்துவீச்சு ஆஸ்ரலேசியக் கிண்ணப் போட்டியிற் பளிச்சிட்டது. இவரின் 4 ஆட்டங்களிலும் 17 விக்கற்றுகளைக் கைப்பற்றினார். இப் 18 வயது வலக்கைப் பந்து வீச்சாளர் இலங்கையைத தோற்கடிப்பதில் முன்னணி வகித்தார்: அவர் 26 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கற்றுகளைக் கைப்பற்றிச் சிறந்த வேகப் பந்துவீச்சாளர்களான'அக்ரம்',இம்ரான்கான் ஆகியவர்களின் வரிசையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்.

இனிவரும் போட்டிகளில் இம்மூன்று வேகப் பந்துவீச்சாளர்களை (பசீர் அக்ரம், யூனுஸ் ஜவாத்) ஊக்கப்படுத்தி இவர்களின் திறமையைப் பயன்படுத்த இம்ரான்கான் தயங்க மாட்டார் என்பது உறுதியாகிவிட்டது. இவர்களிற்குப் பாகிஸ்தான் அணியில் நிரந்தர இடத்தைப் பெற்றுக் கொடுத்த பின் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்றுப் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஆலோசகர்களில் ஒருவராகக் கடமையாற்ற இம்ரான்கான் முன்வரலாம் என்று பலர் கருதுகின்றனர்:

சாஜா சம்பியன் ஷிப்போட்டியில் உண்மையான சம்பியனாக, கீரோவாகப் பாகிஸ்தான் அணித் தலைவர் இம்ரான்கான் விளங்கினார். அவர் இளம் வீரர்களிற்கு அளித்த ஊக்கமும், உத்வேகமும் மிகச் சிறப்பானதாக விளங்கியது என்று பிரபல பத்திரிகைகள் புகழ் ஆரம் சூட்டியுள்ளன.

இம்ரான்கான் தலைமையில் பாகிஸ்தான் அணி உலக கிரிக்கெட் அரங்கில் மேலும் பல சாதனைகளைப் படைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. எது எப்படியிருந்தாலும், பாகிஸ்தானும், பாகிஸ்தான் கிரிக்கெட் துறையும் இம்ரான்கானிற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளன.

## தமிழ் மரபில்

8ம் பக்கத் தொடர்ச்சி

என்பது செய்யுளியல் (நூ,76) இதற்குப் பேராசிரியர் தரும் உரையிலே விதிமுறைக்கட்டுப்பாட்டின் தொனி கேட்கத் தக்கதாயிருப்பதாகப் பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிடுவதும் (ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு விழாமலர்-1981 ப.146-7), இத் தொடபிலே நமது கவனத்திற் குரியதாகும். எனவே தொல்காப்பிரது இலக்கியக் கொள்கையிலே பிற்காலத் திறனாய்வாளருக்கு மேலாணையாக அமையும் மரபு என்ற கட்டுப்பாடும் அமைந்துள்ளமை தெளிவு.

(வளரும்)

## ஆழ்ந்த

7ம் பக்கத் தொடர்ச்சி

பேசுவதையும் நிறுத்து. மோனத்தில் இரு.

உன்னுள்ளே பார். உன் குறைபாடுகளை நீக்க முயற்சி செய். உன் சிந்தனைகளையெல்லாம் ஒன்று திரட்டி, இறைவனை நோக்கிச் செலுத்து. மிகுந்த அடக்கம் கொள். நன்நடத்தையின் உருவமாகும். எப்பொழுதும் நன்மைகளையே செய். தொண்டாற்று அன்புகொள். கொடு, எல்லோரையும் சந்தாஷப்படுத்து.

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பரிசளிப்பு விழா

இம்மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணக்கல்லூரிப் பரிசளிப்பு விழா இம்மாதம்22-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கல்லூரிப் பூங்காவில் நடைபெறும்.

DR. S. JEBANESAN
PRINCIPAL, JAFFNA COLLEGE
VADDUKODDAI

05144


# 11 கம்பியூட்டர்கள் வடக்கு கிழக்குக்கு பகிர்ந்தளிப்பு!

வட,கிழக்குமாகாண சபைக்குக் கிடைத்துள்ள 11 கம்பியூட்டர்கள் விரைவில் இம்மாகாணத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர் பிரதேசங்களுக்குத் தலா ஒன்று வீதம் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு வவுனியாவிற்கு விஜயம் செய்த மாகாணசபையின் கல்வித் திணைக்களச் செயலாளர்.திரு கே. சற்குணராஜா தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள மாதிரி தாவரவியல் தோட்டம் போன்று வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலும் அமைப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

## சந்தை இடமாற்றம்

மாதகல் சந்தை அண்மையிலுள்ள மற்றுமொருகாணிக்கு விரைவில் இடமாற்றம் செய்யப் படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வலி தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார். (13

## இலவச மதிய உணவுக்கு இத்தாலி நன்கொடை

இவ்வருடம் பாடசாலைகளில் இலவச மதிய உணவை வழங்குவதற்காக இத்தாலி அரசாங்கம் இலங்கைக்கு 45 இலட்சம் டாலர் நன்கொடையாக வழங்கவிருக்கிறது.

இத்தாலி அரசாங்கம் இவ்வருடம் அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றுக்கு வழங்கும் மிகவும் கூடுதலான தொகை இதுவாகும்.

இதேவேளை கடந்த வருடம் முதல் இத்தாலி அரசு குருநாகல் மாவட்டத்தில் பாடசாலைகளில் உணவளிக்கும் திட்டமொன்றுக்கு உதவி வழங்கி வருகிறது.


★ காயத்திரி சென்ரர் ★

உங்களுக்குத் தேவையான தரமான போட்டோஸ்ராற் பிரதிகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

## காயத்திரி சென்ரர்

புவனகிரி யாழ்வீதி வல்வெட்டித்துறை

பெருப்பித்தல் (ENLARGEMENT) சிறுப்பித்தல் (REDUCTION) முதலான சகல சேவைகளும் இங்கு மேற்கொள்ளப்படும்.

அத்துடன்;-
ஆங்கிலத் தட்டச்சும் (ENGLISH TYPING) செய்து கொடுக்கப்படும்.

## GAYATHIRI GENTRE

'PUVANAGIRI' JAFFNA ROAD
VALVETTITURAI

05128



உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசித்திங்கள் 6-ம் நாள் (20. 05. 90) ஞாயிற்றுக்கிழமை மாலை 7. 04 மணிமுதல் 8.34 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்ஷத்திரமும், மிதுனலக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

முகாவில்(இய்க்கச்சி)
திரு. திருமதி தாமோதரம்பிள்ளை அவர்களின்
கனிஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன்
**முகுந்தன் அவர்கட்கும்**

அச்சுவேலி (இடைக்காடு)
திரு. திருமதி விசுவலிங்கம் அவர்களின்
புத்திரி திருநிறைச் செல்வி
**கௌரி அவர்கட்கும்**

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம். வைபவ இடம் - Ludgerus Sall, Ruttenschieder Str - 120, 4300 Essen 1 (Ruttenschied), West Germany.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி கந்தையா
திரு, திருமதி சங்கரப்பிள்ளை

திரு. திருமதி விசுவலிங்கம்

05142



# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



என்றும் வாடாத அன்பு மலர்

## செல்வன் சண்முகம் சத்தியசுரேஸ்

(லெப்டினன் சுரேஸ்)

தாயின்மடியில்
17.5.1971

தாயகமண்ணில்
20.5.1989

சுரேஸ்,

எமது செல்வமே, நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் எமக்கு இது ஒரு கனவு தான். உமது செல்லப்பேச்சும், சிரிப்பும் அம்மா என்ற அன்புக் குரலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நிலையாகி விட்டது. உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
அன்புக்குரியவர்கள்.

05141



## COMPUDATA
(PRIVATE) LIMITED

COMPUTER COURSES
COMMENCING SHORTLY

| Batch | Course | Commencing on | Lecture Time | Practical Hrs |
|---|---|---|---|---|
| 01 | Word Star | 29 . 05 .1990 | Tue, Thu, Fri 5.30 — 6.30 p.m | 25 |
| 02 | Lotus123 | 28 . 05 . 1990 | Mon, Wed, Fri 7.00 — 9.00 a.m | 30 |
| 03 | Lotus123 | 26 . 05 . 1990 | Sat, 2—5 p.m Sun 9—12 noon | 30 |
| 04 | dBASE III+ | 06 . 06 . 1990 | Mon, Wed Fri 6.00—7.30 p.m | 40 |

| Course | 1st Inst | 2nd Inst | Total |
|---|---|---|---|
| WS | 1,500 | 1000 | 2,500 |
| Lotus | 1,500 | 1300 | 2,800 |
| dBASE III+ | 2,500 | 1300 | 3,800 |

Further detail: The Course Director
11, St. Lucias Street, Colombo. 13

Enter Today to the world of Tomorrow

# கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வடகிழக்கில் செயலிழப்பு

வடக்குக் கிழக்கிலே கடற்றொழில் கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்து கிடக்கின்றன. இவற்றை செயல்ப்படுத்த அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை கடற்தொழிலாளர் ஒய்வூதிய சமூக பாதுகாப்பு நலன் புரித் திட்டத்தின் கீழ் வடக்குகிழக்கில் இராணுவ நடவடிக்கையினாலும், வன்செயல்களினாலும் பாதிக்கப்பட்ட மீனவர்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இன்றைய யாழ் மாவட்ட எம். பியான எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை (ஈரோஸ்) நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி திட்டம் தொடர்பான சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய செபஸ்தியாம்பிள்ளை ''மீனவர்களை'' இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதற்கான குறைந்த பட்ச வயதெல்லை 18 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை மேலும் குறைக்க வேண்டும் ஏனெனில் மிகவும் இளம் வயதிலேயே மீன் பிடித் தொழிலில் பிள்ளைகள் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்றும் சுட்டிக் காட்டினார். அவர் மேலும் பேசுகையில் கடற்தொழிலாளர் ஒய்வூதியச் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கான கூடுதல் பட்ச வயதெல்லை 59ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது, சாதாரண உத்தியோகத்தர்களே 55வயதில் ஒய்வூதியம் பெற்றுக் கொள்ளும் போது நாளாந்தம் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மீனவர்களுக்கான ஒய்வூதிய வயதெல்லை இவ்வாறு அதிகரிக்கப்பட்டிருப்பதில் நியாயம் ஏதுமில்லை இந்த வயதெல்லையை குறைப்பது மிகவும் சிறந்தது என்றார்.

## வண, லோங் அடிகளார் பேச்சுப்போட்டி முடிவுகள்

நேற்று சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றவண லோங் அடிகளாரின் நினைவு விழா பேச்சுப்போட்டியில் வெற்றி யீட்டியவர்கள்விபரம் பின்வருமாறு.

முதலாமிடம் செல்வி.கமிலா சூசைப்பிள்ளை யாழ்ப்பாணம் இரண்டாமிடம் செல்வி. றோசரி சிங்கராச மானிப்பாய் மூன்றாமிடம் செல்வி. லக்ஷி இன்னேகியஸ் கிளிநொச்சி. நலாமிடம் செல்வன்.றொபின்சன் யேசுநாதன் மயிலிட்டி ஐந்தாமிடம் செல்வி. கறோலின் லோரன்ஸ் கிளிநொச்சி, ஆறாமிடம் செல்வி. கத்தரின் மஞ்சுலா குருசுமுத்துஊறணி, ஏழாமிடம் செல்வி. நந்தினி றோபட் மயிலிட்டி எட்டாமிடம் செல்வி. செபஸ்ரியன் மெடோனா உரும்பிராய், ஒன்பதாமிடம்செல்வி.செவஸ்தின் செபஸ்தியாம்பிள்ளை மானிப்பாய், பத்தாமிடம் செல்வி குயின்மேரி அகஸ்ரியன் வட்டக்கச்சி.

## குறைந்த செலவில் வீடமைப்பு தெல்லிப்பழையில் கருத்தரங்கு

எதிர்வரும் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் வீடமைப்பு செலவை குறைப்பதற்கு பின்பற்றக் கூடிய வழி முறைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வீடமைப்பு தொழில் நுட்ப நிபுணத்துவம் பெற்றவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# யாழ். சாலைக்குத் தேவை 116 பஸ் சேவையிலுள்ளவை 38 பஸ்கள்

யாழ். சாலைக்கு சேவையாற்ற 116 பஸ்கள் தேவை ஆனால் 38 பஸ்களே சேவையில் உள்ளன என்றும் கல்முனை, மட்டக்களப்பு டிப்போக்கள் யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவைகளை தனித்து நடாத்துவதற்கு யாழ். டிப்போ ஒருபோதும் தடையாக இருக்க மாட்டாதென்றும் வடபிராந்திய போக்குவரத்து அறிவித்துள்ளது.

கல்முனை, மட்டக்களப்பு டிப்போக்கள் யாழ்ப்பாணத்திற்கான இரு மார்க்க இரவு பஸ் சேவைகளை உடனடியாகவே ஆரம்பிக்கலாமெனவும் அதற்கான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுமெனவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் சி. கனகரத்தினம் யாழ். டிப்போ முகாமையாளர் சு. மணிவாசகன் ஆகியோர் ஒப்பமிட்டு நேற்று வெளிபிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சாலைக்கு அட்டவணைப்படி சேவையாற்ற 116 பஸ்கள் தேவைப்படுவதாகவும் ஆனால் 86 பஸ் வண்டிகள் மட்டுமே இங்குள்ளதாகவும் அவற்றிலும் மொத்தம் 48 பஸ் வண்டிகள் தற்போது திருத்த வேலைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ். மத்திய பேருந்து நிலையத்தை புனரமைப்பதற்கு அரசிடமிருந்து புனருத்தாரன நிதியைப் பெறுவதற்கு யாழ். அரசாங்க அதிபர் முயற்சி எடுத்துள்ளதாகவும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள மூன்று பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## இராமநாதன் நுண்கலைக் கழக பரீட்சை ஒத்திவைப்பு

இராமநாதன் நுண்கலைக் கழக 3ம் வருட மாணவர்களுக்கு 21ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த சாஸ்திரப் பரீட்சை 25ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பின்போடப் பட்டுள்ளது.

23ம், 24ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் பரீட்சைகள் வழமைபோல் நடைபெறும் என யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

## புங்குடுதீவு குடிநீர் பிரச்சினைதீர சர்வோதயம் நடவடிக்கை

புங்குடுதீவில் நிலவிவருகின்ற குடிதண்ணீர் தட்டுப்பாட்டை ஓரளவில் நிவித்தி செய்து வைப்பதற்காக யாழ் மாவட்ட சர்வோதய அமைப்பாளர் இலவச குடிநீர் விநியோகத்தை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

இலவச குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்காக வடமாகாண அமைப்பாளர் இதற்கென 'பவுசர்' ஒன்றையும் புங்குடுதீவு மக்களுக்கு கொடுத்துதவ முன்வந்துள்ளார்.

வேலவண உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக அதிகாரி திரு நா. தனபாலசிங்கத்தின் அயராத பெரும் முயற்சியின் பயனாகவேஇந்த இலவச குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளன

அவ்வப் பகுதிகளில் உள்ள கிராம சேவையாளர்களினது மேற்பார்வையின் கீழ் பகுதி பகுதியாக குறிப்பிடப்பட்ட தொட்டிகளில் குடிநீர் சேகரித்து வைத்து விநியோகிக்கப் படவுள்ளன.

சென்ற 1983ம் ஆண்டுக்கு முன்னர்இலங்கை சமூகசேவை திணைக்களத்தினால் இப் பகுதிக்கு இவ்வாறே இலவச குடிநீர் வழங்கப்பட்டுவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (19)

## யாழ் மக்கள் வங்கிக் கிளை நிவாரணக் கொடுப்பனவுகள்

யாழ்மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளையில் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை தொழில்முயற்சிக்கான நன்கொடைப்பணம் சங்கானை நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளது.

அதே தினம் வீடுதிருத்துவதற்கான நன்கொடைப்பணம் நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், ஊர்காவற்துறை,யாழ்பெரியகடை, சுண்டிக்குளி, நாவாந்துறை,ஆகிய பகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

## ஆலயம் அருகே ஒரு ஆடு அடுத்த வளவில் 60 ஆடுகள் வேள்வி

இளவாலை மணலடைப்பு மகேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் வேள்வி நடைபெற்றது,

பொங்கல் பூசைகள் முடிவுற்றதும் ஆலய முன்றலில் ஆலயத்திலிருந்து 100 யார் தூரத்தில் ஒரு ஆடும் ஒரு கோழியும் பலியிடப்பட்டன,

அதனைத் தொடர்ந்து சுமார் 60 ஆடுகள் அருகிலுள்ள பனை வளவினுள் பலியிடப்பட்டன. (48)

## தொழில் நுட்பப் பயிற்சிகள்

விரைவில் சகல பாடசாலைகளிலும் 9ஆம் வகுப்பிலிருந்து தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன,

க.பொ.த சாதாரண பரீட்சை எழுத முன்பு மாணவர்கள் இத்தகைய பயிற்சியை பெற்றுக் கொள்வார்கள். க.பொ.த சாதாரணப பரீட்சையில் சித்தியடையாதவர்கள் கூட இத்திட்டத்தின் கீழ் தொழிற் பட்டங்களைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)

### குளிர்பாணங்கள்—

கள் மக்கள் முன்னணி நிர்ணயித்திருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று முதல் இது அமுலுக்கு வரும் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின. (11)

### முரசொலி—

கே.நாராயணசாமி றொக்கட் விளையாட்டுக்கழகம் கோவில்குளம் வவுனியா நான்காம் இடம்: ஐ. வினாயகமூர்த்தி மந்துவில் கொடிகாமம் ஐந்தாம் இடம்: அ. றட்ணசிறி பண்டார நெடுங்குளம் வவுனியா

முதலாம் இடத்தைப்பெற்றவர் ஆறுமைல் வித்தியாசத்தில் முன்னணியில் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலை எட்டு மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பித்த சைக்கிள்ஓட்டப்போட்டி வீரர்கள் பிற்பகல் இரண்டுமணிக்கு ஆரம்ப இடத்தை வந்தடைந்தனர்.

வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் இப்போட்டியினை நடத்துவதற்கு வீதிப் பாதுகாப்பு உட்பட சகல ஒத்துழைப்பும் வழங்கினார்கள்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு செ. பத்மநாதன் விழாவின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். (11)

### நாளைய—

பெறவேண்டியுள்ளனர். நீண்ட நாட்களின் பின் மலையக மக்களின் போராட்டத்திற்கு வடக்கு கிழக்கு மக்கள் தமது பூரண ஆதரவு உண்டு என்பதை தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்

### இன்று—

ஆறாயிரம் மக்கள் முன்வந்திருப்பதாக பாதயாத்திரையின் ஏற்பாட்டாளர் வடமேல் மாகாணசபை உறுப்பினரான திரு. பீ. டி. நிஸங்க திஸாநாயக்க வவுனியா விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலகத்தில் வைத்து முரசொலிக்கு அளித்த பிரத்தியேக பேட்டியின்போது குறிப்பிட்டார்.

வவுனியா எல்லைக்குள் இவர்கள் நுழைந்ததும் பாதயாத்திரை குழுவினருக்கு முழுப்பாதுகாப்பு அளிக்க வவுனியாப் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நகர கந்தசுவாமி கோவில் ஆலய முன்றலில் பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெறும். (11)

### மலையகத்தில்—

வேலைக்குசென்றனர் ஆனால் சந்திரசேகரன் விடுவிக்கப்படாததையடுத்து மீண்டும் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் இறங்கியுள்ளனர்.

தற்போது இப்பகுதியில் பொலிஸ், ராணுவம் காவல் நடவடிக்கையைப் பலப்படுத்தியுள்ளனர்.

### முரசொலி சைக்கிள்—

புதுக்குளத்தில் ஆரம்ப இடத்தைச் சென்றடைந்தது.

வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்

### ஹர்த்தாலுக்கு—

டுக் கொள்கின்றோம்.

அந்தவகையில் இம் மாதம் 21ம் திகதி விடுதலைப்புலிகளால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கும் ஹர்த்தால், பகிஷ்கரிப்பு, மற்றும் கதவடைப்பு நடவடிக்கைகளுக்கு எமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குகின்றோம் என்று ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேச்சுக்கள்—

சிங்கமும், செயலதிபர் திரு. யோகரட்ணம் யோகியும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய நேரிட்டால் அரசு எம்மீதும், எமது மக்கள் மீதும் மீண்டும் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தலாம்

இன்று சிறிலங்கா அரசானது ஒதுக்கப்பட்ட தமிழ்க் கும்பல்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அரசின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல,

கடந்த காலங்களில் இந்திய அரசு விட்ட அதே தவறுகளைத்தான் சிறிலங்கா அரசும் செய்யப்பார்க்கிறது. வட-கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் அமைதியை இந்திய அமைதிப்படையினருடன் கூட்டுச்சேர்ந்து குலைத்தவர்களை ஒரிஸாவில் இருந்து அழைத்து வந்து பேசுவது சிறிலங்கா அரசின் பச்சோந்தித் தனத்தையே எடுத்துக் காட்டுகிறது.

இது தொடருமானால், தற்போதைய தற்காலிக சுதந்திரம் மறைந்து, மீண்டும் ஒரு பூகம்பம் வெடித்தாலும் வெடிக்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.

மூதூர்ப் பிரதேச அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அரசின் தலைமையில் நடைபெற்ற மேற்படிக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். திருமலை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரூபனும் மேற்படி கூட்டத்தில் பேசினார்,

இப்பத்திரிகை முரசொலி பப்லிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ேல இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 20.05.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது